# தண்டலை



ச. கே. பஞ்சாட்சரம்

உ

# தீண்டலே

கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம்

வெளியீடு :


...ARATHAS...
49 KALAIMAGAL R...
ARTY...
JAFFNA

பூமா[illegible]
பதிப்பகம்

**THANDALAI** → A COLLECTION OF POEMS

*by*

S. V. PANCHADCHARAM

உரிமை ஆசிரியருக்கே

முதற் பதிப்பு — 1966.

இன்பத் தமிழ் என்றென்றும் வாழவேண்டுமென
எண்ணும் இனிய நெஞ்சங்கள் அனைத்திற்கும்
இந் நூல் காணிக்கையாகட்டும்.

— ச. வே. ப.

அச்சுப் பதிப்பு :
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்,

விலை ரூ. 1-50

# பதிப்புரை

பூமாலை பதிப்பகத்தின் முதற் படையலாக —புதுமலர்த் தொடையலாக '**தண்டலை**' வெளிவருகிறது.

இந்நூலில் இடம்பெறுவன ஈழத்தின் பல தமிழ் ஊர்களிலும் நடைபெற்ற கவியரங்குகளில் கவிஞர் பஞ்சாட்சரம் அவர்கள் பாடிய பைந்தமிழ்க் கவிதைகள் — உணர்ச்சித் துடிப்பும் பாமரரும் படித்து மகிழத்தக்க எளிமையும் உடைய பழகுதமிழ்ப் பாட்டுக்கள்.

இதனைத் தொடர்ந்து இன்னும் பல ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்தோவியங்களை வெளியிட எண்ணியுள்ளோம். எதற்கும் ஈழத்து வாசகப் பெருமக்களின் ஆதரவு மிக இன்றியமையாதது.

இந்நூற்கும் கவிஞர்க்கும் ஆசியுரை யளித்த திரு. சா. சி. கருணாநந்தன் M. A. அவர்களுக்கும், செகப்பிரியரின் இனிய கவிதை ஒன்றைத் தாமே மொழிபெயர்த்து அதனையும் தந்து முன்னுரைவழங்கியுள்ள கவிஞர், பண்டிதர் க. சச்சிதானந்தன் B. A. அவர்களுக்கும், கவிஞரைப்பற்றிய தமது கருத்தை வழங்கிய இன்னொரு கவிஞரான வித்துவான் க. கணபதிப்பிள்ளை B. A. அவர்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுதவிய யாழ். சைவப்பிரகாசஅச்சகத்தார்க்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

கவியரங்கங்களின் விபரம் நூலின் பிற்பகுதியில் தரப்பட்டுள்ளது.

28/1 பலாலிவீதி,<br>யாழ்ப்பாணம்,

செ. து. தெட்சிணாமூர்த்தி<br>"பூமாலை பதிப்பகம்"

நல்லூர் ஆசிரிய கலாசாலைத்

தமிழ் விரிவுரையாளர்

**திரு. சா. சி. கருணானந்தன், M A. Dip-in-Ed.**

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

ஈழத்தின் பல பகுதிகளில் பல கவியரங்குகளில் பங்கெடுத்துப் பயன்பெற்றவர் திரு. ச. வே. பஞ்சாட்சரம். பெற்றபயனின் பெறுபேறுதான் இந்நூல். குறைந்த வயதில் நிறைந்த பயனைப் பெற்று, யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என 'தண்டலை' என்னும் தலையங்கத்துடன் உருவாக்கியுள்ள இக் கவிதைச் சோலை கற்றோரும் மற்றோரும் மனமுவந்து மோந்து கொள்ளத்தக்க தொன்று.

மென்மையான உள்ளம் படைத்தவர். அத் தன்மைப் பண்புள்ள பஞ்சாட்சரத்தின் படைப்புக்கள் அத்தன்மையாகவே இருக்கும். மனிதவாழ்க்கைக்கு வேண்டிய உயர்ந்த பண்புகளை உருவாக்கும் சாதன மாகக் கலைகளை அமைத்துப் பேணி வளர்த்தல் தமிழ் மக்களின் பெரும் கடமை ஆகும். இக் கடமையை உடைமையாக்கி வேறும் பல கவிதைகள் இயற்றிச் சிறப்புறச் சேவை செய்யவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை இறைஞ்சிக் கவிஞரையும் போற்றுகின்றேன்.

எனது மாணவனின் இவ்வரிய செயலை எண்ணிப் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். வன்மையை வாழ்த்துகின்றேன்.

உ

பிரபல கவிஞரும்,

யாழ். மத்தியகல்லூரி ஆசிரியருமான பண்டிதர்

க. சச்சிதானந்தன் B. A. அவர்கள்

வழங்கியுள்ள

# முன்னுரை.

கணந்தோறும் மாறிக்கொண்டிருக்கும் இவ்வுலகிலே ஒரு புலவன் ஒவ்வொருநாளும் பல்லாயிரக் கணக்கான அனுபவங்களை மனதுள் கொள்கிறான். ஆனால், அவை எல்லாம் அவனைத் தாக்குவன அல்ல. சில அனுபவங்களே உறைப்பாக அவனைப் பற்றிக்கொள்கின்றன. அவற்றைக் கருவாக வைத்துக்கொண்டு கற்பனையைச் சேர்த்துக் கவியை ஆக்குகிறான் புலவன். உலக அனுபவங்கள் தாறுமாறாக ஒழுங்கின்றி அவன் குறுக்கே சென்றாலும் அவற்றுள் சிலவற்றில் ஓருண்மையைக் கண்டு அதனை மையமாகக் கொண்டு ஏனைய அனுபவங்களை ஒழுங்காக்கி வைக்கிறான். அவ்வொழுங்கைக்கொண்டு எல்லா அனுபவங்களுக்கும் கருத்துக் கொடுக்கின்றான், சுருங்கச் சொன்னால் உருவம் இன்றி, ஒழுங்கின்றி, காற்றுப் பொருள்போற் கிடந்த அனுபவங்களை உருக்கொடுத்து, உயிர் கொடுத்து அனுபவப் பொருளாக்கிப் படைப்பவன்

கவிஞன். இந்த சக்தி நியாய வரம்புக்கும் விஞ்ஞான கணித வாய்பாடுகளுக்கும் அப்பாற்பட்டது. உணர்வினல் கண்டு கொள்ளக்கூடியது. விஞ்ஞானி காணுததை புலவன் காண்பான். இதனை செகசிற்பியார் என்னும் ஆங்கிலக் கவிஞர் "நடுவேனிற் கனவு" என்னும் நாடகத்திலே பின்வருமாறு கூறியுள்ளார்.

"கற்பனைக் கனவினில் உற்பவித் துருப்பெறும்
தோற்றம் யாவும் ஆறி அமைந்த
பகுத்தறிவதற்கு மிகுத்து விளங்காதன
காதலன் கவிஞன் கருத்தழி பித்தன்
ஆகிய மூவரும் அகக்கற் பனையில்
ஒருநிலை உள்ளார். ஒருவன் பெருநரகு
அடங்காப் பைசா சனைத்தையுங் காண்பான்;
அவனே பித்தன்! ஆசைக் காதலன்,
எகிப்திய மங்கையின் இமையில், ஹெலெனின்
அழகினைக் காண்பான்! ஆனல் கற்பனைக்
கவிஞன் கண்ணோ புவியையும் விண்ணையும்
விண்ணையும் புவியையும் மாறி மாறி
அழகுப் பித்த உணர்விற் சுழன்றே
அளந்து நோக்கும்! அரியகற் பனையோ
அவனியில் என்றும் அறியாப் பொருளுக்(கு)
உடலைத் திரட்டி உருவங் கொடுக்கும்!
கவிஞன் எழுதுகோல் காற்றின் வெறுமை
ஆகிக் கிடந்த அவற்றினை எடுத்து
உருவங் கொடுத்தே உலகினில் வாழ

ஊரும் பெயரும் ஒருங்கே அளிக்கும்!
அப்படி யாக்கும் செப்படி வித்தைக்
குயர்ந்த கற்பனை உரமிக வேண்டும்!
களிப்பிற் கலந்த தென்னில் அதுவே
இன்பம் கொணரும்! இல்லெனில்
மருண்டவன் பயத்தில் இருண்ட இரவில்
கரடியாய்ப் புதரைக் காண்பதும்
... ... ... ... ... ... ... ... ... ... ......''

—க. சச்சிதானந்தன்.

கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களுடைய புலமை உள்ளத்திற்கு இன்றைய நமது சமூகத்தின் பல்வேறு வகைப்பட்ட அனுபவங்களும் குறுக்கே ஓடுகின்றன. இலங்கைத் தமிழ்ப்பெரியார்களின் தமிழ்நூல்களில் ஆடித் திளைக்கிறார். ஈழநாட்டின் வயல்களிலும் வாழைத் தோட்டங்களிலும், சோலைகளிலும், காடுகளிலும் உலாவுகிறார். நவ நாகரிக மங்கையரை வீதியிலோடும் 'வசு' வண்டிகளில் சந்திக்கிறார். ஏழையின் குடிலையும் செல்வனின் மாளிகையையும் பார்த்துப் பெருமூச்சு விடுகிறார். சமூகத்தின் சிறுமையைக் கண்டு பொங்குகிறார். சித்திரையாம் புத்தாண்டு வசந்த மகளோடு கைகோத்து வரக் குயிலைக் கூவுகிறார்.

ஈழநாட்டிலே தமிழ் மக்கள் எல்லாரும் வேறு எவ் விதத்தால் வேறுபடுவாராயினும் கவி என்றால் ஒன்றுபட்டு மகிழ்ந்து திளைப்பர். இதற்கு இன்று கிராமங்கள்தோறும் நடந்து வரும் கவியரங்குகள் சான்று பகரும். கவியரங் கில்லாத விழாக்களில்லை. கவியரங்கு கேட்டு மகிழாத

தமிழ்மகள் இல்லை! கவியரங்கங்கள் மக்களை இவ்வாறு கவர்ந்தமைக்குப் பஞ்சாட்சரம்போன்றகவிஞர்களே காரணமாவர் அந்தக் கவியரங்கங்களிலே மட்டக்களப்பின் பொலைசாய்க்கும் கழனிகளையும் காலிமுகக்கடற்கரையிலே உலவும் நாகரிகப் பெண்ணையும், தேமாஞ் சோலைகளில் உலவுந் தென்றலையும், வள்ளுவரின் குறளமுதினையும், விபுலானந்தரின் யாழிசையினையும் ஒருங்கே மக்களுக்கு அனுபவிக்கக்கொடுத்தால் கவியரங்கத்தைச் சுவைக்க மக்கள் திரளுவதில் ஆச்சரியமில்லையே!

மேனாட்டார் யாரோ ஒருவர் ஒரு கூட்டத்தைக் கலைப்பதற்கு "இதோ கவி வருகிறது" என்று சொன்னால் போதும் என்று கூறியதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஆனால் மக்களைத் திரட்டும் மந்திர இசையாக, தமிழ் நாட்டிலே கவி மாறியது. இதைவிட இவரின் கவிதையின் சுவைக்கு நான் வேறு நற்சாட்சிப் பத்திரம் வழங்க வேண்டியதில்லை.

இக் கவிதைத் தொகுதியிலே செப்பலோசை பெரிதும் பயின்று வருகின்றது கவிஞர் பஞ்சாட்சரம் அவர்களுக்கு இவ்வோசை கைவந்த தொன்றுபோற் காணப்படுகின்றது. மோனை எதுகைக்காக செப்பலோசையானது, பிறழாமல் கருத்துக்கு ஏற்றதாக மெல்லென்று துளும்பி வழிவதை இவரது கவிகளிற் காணலாம்.

கவிதையின் மொழி நடை இயல்பாகவும் எளிதாகவும் மக்களைக் கவரக்கூடியதாகவும் அமைந்துள்ளது. மக்களை வசிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் கவியரங்குக

வியிலே எழுந்தமையால் அவர்கள்பேசும் மொழிகளையும் இடையிடையே புகுத்தியுள்ளார்.

இக் கவிதைத் தொகுதியிலே புத்தாண்டுக் கன்னியை வரும்படி கூவுமாறு குயிலைக் கேட்கிருர். அப் பாடல் ஓசை நயத்தாலும் மென்மையாலும் தண்ணென்ற ஒழுக்கிஞலும் என்னைக் கவர்ந்தது.

'சித்திரத்துக் கோலஞ் சிதறிக் கொலுவிருக்க
முத்திரைகள் போட முழுவசந்தம்........" எனச்

சித்திரையை வசந்தத் தோழியோடு அழைக்கும் இவர், முருக்கம் பூக்களின் காட்சியை "உள்ளுருக்குங்காதல் உதவுங் கிளிமொழியார் கள்ளிருக்குங் கொவ்வைக் கனியிதழ் போல் முள் முருக்கம் பூக்கள் சொரியப் புது வசந்தக் கன்னிக்குப் பாக்கள் நயஞ்சேரப் பாடு" என்று காட்டுகிருர் இவ் வெண்பாவிலே மோனை எதுகைக்காக முட்டுப்படவில்லை. கருத்தும் ஓசையும் ஒன்றையொன்று மிகுவிக்கின்றன. 'தண்டாடப் பூத்துச் சதிராடுந் தாமரையில் வண்டாடிப் பாடும்" என்பதில் இரு வரிகளிலும் அமைந்த "ஆடுதலில்" ஒரு அழகுண்டு. "கொப்போடு மூஞ்சல் குலுங்க" என்பதில் வீண் வார்த்தைகள் இல்லை

'குன்றின் சரிவினிமை குதித்தோடும் நீரறியும்
தென்றல் தொடுஞ்சுவையைத் 'தீ'பட்ட புண்ணறியும்
கொப்பின் தழுவினிமை கொஞ்சுமலர்க் கொடி அறியும்
உப்பின் தனிமுதன்மை ஊரார் உணவறியும்"

என்று அடுக்குபவர் "தங்கத் தமிழினிமைதனையிவ் விரியுலகம் எங்கும் அறியும் எல்லாரும் போற்றுகிறார்" என்று முடிக்கும்பொழுது அதிலே பிறக்கும் சுவையை நாம காட்டவேண்டியதில்லை புத்தாண்டே, வெளியுலகிலே தொழுகை, நோன்பு துதிபாடும் ஊர்வலங்கள், விழுகை அழுகை விறுற்ற மெய்யன்பால் ... ... இப்படியாக பத்திரிகைகளிலே நிறைவதுடன் அவர் ஆசையோடு எதிர்பார்க்கும் புத்தாண்டு தென்னை பனையிற் சீவுகின்ற கட்குடைகள் வன்னமலர்க் கடையாய் கட்கடையாய் மாற, இறைச்சிக் கடைகள் ஈ யெறும்புஞ் செல்லாமல் வெறிச்சென்றிருக்க, மீனுக்குத் தூண்டில் வீசல் போய் விண் தங்கும் மீனுக்குள் வாழும் மேம்பாடு மலர வருகின்றது. இதிலே "மீனுக்குத் தூண்டில்" "விண் தங்கும் மீனுக்குள்" என்ற அடியில் மீன்களிலே ஒரு சிறப்பு உண்டு. இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்ததுபோல், வரவேற்கும் புத்தாண்டிலே அவர் கனவு காணும் காட்சிகளைப் பாருங்கள்:

"காரேறிப் பூத்துக் கனநீர் பொழிந்தேரி
நீரேறிப் பூத்து நின்றாட நெற்கதிர்கள்
போரேறிப் பூத்துப் பொலியட்டும்; திருமங்கை
தேரேறிப் பூத்துச் செழும்பவனி கொள்ளட்டும்
கூரேறிப்பூத்த கொங்கையரின் கற்போங்கி
வேரோடிப் பூத்து விளங்கட்டும் நல்லறங்கள்!"

புத்தாண்டுக்குப் புதுமை, பொலிவு, நிறைவு, இன்பம் பூரிப்பு என்பன மிகுதல் வேண்டும். ஏரி நீரேறிப் பூக்க

வும், நெற்கதிர்கள் போரேறிப் பூக்கவும், திருமங்கை தேரேறிப் பூக்கின்றுள். ஏரியின் நிறைந்த நீர், நெல்லின் விளைந்து சாய்ந்த கதிர்கள், மங்கையரின் பூரித்த கொங்கைகள் இவையெல்லாம் நிறைவு பொலிவு புதுமை இன்பம் இவற்றை நம மனதிலே வரவழைக்கின்றன. 'ஏறிப் பூத்து' என்ற சொல் எவ்வித முட்டுப்பாடுமின்றி ஒவ்வொரு வரியிலும் வெவ்வேறு கருத்தமைய மோனை எதுகை தண்ணென்றெழுகிச் செல்ல அமையும் இன்பம் படிப்போர்க்குப் புலனுகும்.

கவியை முடிக்கும்பொழுது, "இப்படியே உன்றன் எழில்வாய் திறந்து வரம் செப்படியே அம்மா" என்று முடிப்பதில் உணர்ச்சி பொங்குகிறது, முதல் அடியில் ஓசைமுற்றிக் கருத்து முற்ருது இரண்டாம் அடியின் பாதியிலே ஓசையும் கருத்தும முற்றுவது ஒருதனி அழகைக் கொடுக்கின்றது 'செப்படி அம்மா' என்று சொல்லியிருந்தால் இவ்வரிகளின் உயிர்நாடி அறுந்திருக்கும். செப்படியே' அம்மா என்ற 'ஏ' காரத்திற்குப் பொருளில்லை என்று பலர் எண்ணலாம். ஆனுல் ஓர் உண்மைக் கவிஞனுக்குத்தான் அதிலே ஓடும் உயிர்த் துடிப்பு விளங்கும்.

ஏற்கனவே அரங்கங்களில் காதோடு கொண்டுசென்ற கவிகளைக் கரத்தோடு வைத்துப் படித்து இன்புறும் வாய்ப்பை நூலாசிரியர் செய்தமைக்குத் தமிழுலகம் நன்றி பாராட்டும்.

# புகு முன் ........................!

ஈழத்து இலக்கிய உலகம் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து நிற்கிறது. பழமைதான் பெரிது புதுமை தேவையில்லை என்பது ஒரு கட்சி புதுமைதான் பெரிது பழமை ஒழிய வேண்டும் என்பது மற்றக் கட்சி. பழமை விரும்பும் கட்சியைப் பயன்படுத்தி, புதுமைகளில் எப்படியும் குறை கண்டு, தாம் உயர்ந்தவர்கள் என்று காட்ட வேண்டும் என்ற புகழ வெறியில் சில அரை குறைப் புலமைக் குருவிச்சைகள் அலைகின்றன.

புதுமை வாதிகளைப் பயன்படுத்தி, அரசியல் நோக்கங்களை நிறைவேற்றவும், பாலுணர்ச்சியைத் தூண்டி எழுதுவதன் மூலம் சமுதாயத்தின் சிறந்த வரன்முறைகளைச் சீர்குலைத்து இலக்கியத் தொண்டினை இறைச்சிக் கடை வியாபாரத்தின் தகுதிக்கிறக்கவும் முயன்று வருகின்றன, வேறு சில சேறு கிளறும் வாத்துக்கள்.

பழமை என்ன புதுமை என்ன, மனிதன் நல்வாழ்வு வாழ உதவக்கூடிய எந்த இலக்கியமும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே என்ற உண்மையை இரு கட்சியினரும் உணர்ந்தால் இந்த தகராறுக்கே இடமில்லாமற் போய்விடும்

எனினும் நல்ல புதுமைகள் சிறப்பாக விரும்பப்படவேண்டும். ஏனெனில் அப்புதுமைகள் கவர்ச்சியானவை; அத்துடன் காலத்தோடனும் மக்கள் வாழ்க்கையுடனும் ஒட்டியனவாகவும் அவை அமைந்திருப்பின் உணர்ச்சியைத் தூண்டவும் மனத்தின் ஆழத்தில் பதிந்துவிடவும் வல்லவை. இந்த எண்ணத்தின் அடிப்படையில் உருவெடுத்தவையே எனது கவிதைகள்.

இக் கவிதைகள் தோன்றக் காரணமாக என்னைக் கவியரங்குகளுக்கழைத்த எல்லா விழாப் பொறுப்பாளர்களுக்கும் இந் நூல் அச்சாக வேண்டும் என்ற எனதாவலை நிறைவேற்றிய பூமாலை பதிப்பகத்தாருக்கும் எனது நன்றி.

"வேல் மனை"
இணுவில், 15-8-66.

ச. வே. பஞ்சாட்சரம்

௨

# இன்பத்தில் இன்பம்!

'வெண்ணி லாவொரு பெண்ணை உமிழ்ந்தது!
மெய்ம றையவள் பண்பை வகுத்தது!
விண்ணி லும்இணை யற்ற பசுங்கிளி!
மெய்யெ லாமெழிற் காய்களும் பூக்களும்!
பண்ணி லும்பெரு வல்லபி! பண்ணுடன்
பார்ம யங்கிடும் ஆடலி! அன்னவள்
கண்ணி லேயிவன் கட்டெழில் பட்டது,
காத லித்தனள்! என்றிடும் இன்பமும்—

மாலை கள்புகழ் மாலைகள் ஆயிரம்!
வந்து வந்தெமை வாழ்த்துநர் ஆயிரம்!
நாலு கூடைகள் மிஞ்சி வழிந்திட
நாளும் வந்திடும் அஞ்சல்கள் ஆயிரம்!
நூலி னுக்கணி முன்னுரை வாங்குநர்
நுண்க ருத்துகள் கேட்குநர் ஆயிரம்!
வேலை கேட்டெமை அண்டுநர் ஆயிரம்!
மேன்மை இப்புகழ் தந்திடும் இன்பமும்—

கண்டி யிற்றிகழ் பல்கலைப் பள்ளியில்
கற்கி ருள்கடைக் குட்டி! பசுந்தமிழ்ப்
பண்டி தன்நடு வில்மகன்! மற்றவன்
பட்ட தாரிபொ றியியற் கல்வியில்!
லண்ட னில்இளை யான்!மலை யாவிலே
மூத்தவன் தொழில் மந்திரி! இப்படி
வண்ட லாம்பொருட் பாதைகள் பல்கிட,
வாழ்வி னில்வலு ஓங்கிடும் இன்பமும்—

காதி னித்திடும் கள்ளிசை இன்பமும்
கண்க ளித்திடும் ஓவிய இன்பமும்
மாத ளித்திடும் மெய்சிலிர்ப் பின்பமும்
வாய்சு வைத்திடும் வண்சுவை இன்பமும்
ஊது தென்றலில் ஒன்றிநம் மூக்கினில்
உட்பு கும்நறு நல்மண இன்பமும்
ஓதி டிற்சிறு இன்பமே! மெய்யொடும்
உள்ளம் உற்றிடும் நீள்வறு மின்பமே!

என்ன எண்ண மகிழ்வு சுரப்பவன்!
எண்ணி டாதவற் குத்தெரி யாதவன்!
நுண்ணி யற்கலை செய்தவன்! அன்னவை
நூற்று வித மலர்ச்சியில் நிற்பவன்!
விண்ணி லும்புவி மீதிலும் எங்கணும்
வீதிநெ றிப்பட ஆள்பவன்! தன்னையே
உண்ணெ கிழ்ந்து நெகிழ்ந்து வணங்கிடும்
ஒகை யார்வலி மைமிகும் இன்பமும்—

வெறுமு டல்மனம் மட்டும் மகிழ்ந்திட
மெல்ல ஓய்ந்திடும் ஒருவப் பல்லொம்
மறுபி றப்பினும் இன்பம் அருந்திடும்
வழிகள் ஈந்திடு நீள்வு மிகுத்தவை!
அறநெ றிப்படு மாந்தர் குலத்தினை
ஆண்ட வன்அடிக் கேற்றி உயர்த்திடும்
விறல்ப டைத்தவை! உள்ளுயிர் நெக்கிடும்
மேன்மை வாழ்வை அளித்திட வல்லவை.

பண்பி னில்வரும் இன்பஞ் சுவைத்திடும்
பண்பு வாழிய! ஆண்டவன் மெய்யடித்
தொண்டி னில்வரும் இன்பம் மதித்திடும்
தூய்ய நெஞ்சுகள் வாழிய! அன்பினில்
கொண்டல் அன்னையர் போலவே இன்புறும்
கூர்த்த மெல்லுளச் சான்றவர் வாழிய!
மண்டி வாழிய நல்லவை யாவையும்!
வார்த்தை யிற்பிழை உண்டெனில் தாங்குக.

# இதுதான் வாழ்வு!

ஐந்தும் மூன்றும் ஏழென்றும் அருங்குறளைத்
தந்த புலவன் தமிழ்க்கம்பன் தானென்றும்
ஆசி யாவில் அமெரிக்கா உளதென்றும்
கூசி டாமற் கூறுகின்ற மாணவரை
வழிநெடுக வாத்திப் பணிநடுவே காண்கின்றோர்
பிழைபடநான் வாழ்வும் எதுவென்று பேசுவனேல்
மன்னிப்பர் என்று மனமூட்டுந் துணிவினிலே
முன்னின்றேன் கவிதை மொழிந்து!

எதுவாழ்வா மென்ற கேள்வி எழுப்பினமைப்
பதில்கூற இந்தப் பாவரங்கி லேற்றியுள
சட்டம்பி மாரே! தங்கள் வினாவிற்கு
வெட்டொன்று துண்டி ரண்டாக விடைகூறில்,
மிக்க கல்வி மேம்பாட்டால் நெஞ்சங்கள்
நெக்கி நெகிழ்ந்த நிலையினிலே காண்பதுதான
வாழ்வு! பலநூறு மாணவரை இந்நெறியில்
தாழ்வு தவிர்த்துத் தலையெடுக்கச் செய்வீரேல்
இன்னுங் காலஞ் சிலவற்றில் எம்மிடையே
பின்னிப் பிணைந்து செல்வம் பிணியின்மை
எல்லாஞ் செழித்திங் கிலங்கிடுதல் நிச்சயமே!
நல்லார் தொகையில் நாடே நிறைந்துவிடும்!

அறத்தின் தவரு இன்ப அறுவடையை
மறத்தல் அறியா வல்ல வினைப்பயனை
கடத்தற் கரிய கடவுளெனும் பரம்பொருளை
எடுத்து நறிதாய் இளஞ்சிறுவர் நெஞ்சறிய
உரைத்தல் வேண்டும்! உளத்தில் அவர்கட்குத்
திரைக்கும் ஐயம் தீரும் படிவிடைகள்
அறிவுக் கேற்ப அறையப் படல்வேண்டும்!

இறைவன் உள்ளான்! இயற்றுஞ் செயல்கள்தம்
பெறுபே றெய்மைப் பிழையாது வந்தடையும்!
அறமே வாழ்வின் அசையாத் துணை!என்று
வலுவாய்த் தெளிவாய் மனமார நம்பிடவே
சொலுவீர்! மேலும் தூய அறநூல்கள்
படிக்கும் படியும் நெறிவல்லார் அடிபற்றிப்
பிடிக்கும் படியும் பிள்ளைகளை ஊக்கிடுவீர்.

கொஞ்சங் கொஞ்ச மாய்நெகிழ்ந்து விரிகின்ற
நெஞ்சந் தெய்வப் பண்பில் நிறைந்துவிடும்!
நெஞ்சம் நெகிழ்ந்து பண்பட்ட நிலையினிலே
பஞ்சம் ஏது பழுதற்ற வாழ்விற்கு?
நன்மை காணில் நயந்தேற்கும் நல்லுள்ளம்
புன்மை காணில் புறங்கண் டொழித்துவிடும்!

புனிதத் தெய்வப் பூஞ்சிதறல் அன்னையர்கள்,
மனிதக் குலத்தின் மாண்பார் ஒளிச்சுடர்கள்
பச்சை யிழந்து பழங்கிழமாய்ப் போயபினும்
உச்சி மிசைக்கொண் டோம்பப் படுவார்கள்.

காற்றில் மழையில் சனலும் வெயில்நடுவில்
ஏற்ற இடர்கள் ஈந்த வரும்படியில்
பள்ளிக் கனுப்பிப் படிப்பித்து மைந்தரினை
விள்ளும் பரிசிற் குரியவராய் விட்டுவரும்

தந்தைக் குலத்தோர் தாங்குஞ் சுமைநீக்கி
நொந்த மனத்தில் நுரைக்கும் மகிழ்வீயப்
படுவர், நன்றிப் பண்புடைய மைந்தரினல்
தொடுவர் சொர்க்கம்! மூத்த புதல்வர்கள்

எடுபிடியாய் நின்றும் எதிர்ப்பேதும் பேசாதும்
கெடுபிடிகள் கீழ்மைக் காளாகிப் பின்னின்றும்
சிற்றடிமை செய்யும் இளையார்கள் நல்வாழ்வு
பெற்றுயர்வு காணப் பேரன்போ டுழைத்திடுவர்!

கட்டிளமை என்னுங் காலம் நிலைத்தபணிப்
பட்டியல்கள் செய்யும்! அல்லாமற் பண்பின்றி
மதகுகளில், ஆல மரநிழலில், தெருவோரக்
கதவுகளில், எல்லாங் கழியாது! பண்புள்ள
மங்கையரைக் காணில் மனத்தால் வழிபடுவர்!
பொங்கிடு மாசைக்குப் பொறுமை வரம்பிடுவர்!
இப்படியோர் பெண்ணை இறைவன் மணத்துணையாய்
எப்படியும் ஈவன் என்றும் அடங்கிடுவர்.

மாலை சூட்டும் மான்விழியார் ஏலலராய்
ஆலை யாட்டும் கரும்புகளா யல்லலுறுர்!
வேலை விட்டு வீடடைந்த ஆடவர்கள்
சோலை யிட்ட சொல்லாற் சுகம்பெறுவர்
பள்ளி யறையிற் பயிலும் உரிமையடைப்
பள்ளி யறையிற் பாடுபடும் பெண்டிர்க்கே!
நெஞ்சம் பண்பில் நிறைந்தோர்தம் வாழ்வில்,ஆம்!
கொஞ்சங் கூடக் குறைகள் அணுகாது!

மீட்டாத வீணை, விளையாடாப் பூம்பந்து
சூட்டாத மாலை, சுவைக்காத வாலிபமாய்
ஆக்கத் திறமை அனைத்தும் இருளடைந்து
தூக்க நிலையிற் சுருண்டு கிடக்காது!

நின்று சிதம்பி நெடிவீசும் நீர்நிலைகள் —
மென்று விழுங்கி வெறுங்காற்றைப், பசியினிலே
வெந்து பிணிகள் விளைக்குங் குடல் — இவைபோல்
சிந்தை சோம்பித் தீங்குகளை எண்ணார்கள்!

வாயால் வயலுழுது வாயாலே நெல்விதைத்து
வாயால் நீர்பாய்ச்சி வாயாற் பயிரறுத்து
மனத்தாலே ஆமாம்! வாயாலே அல்லவெறும்
மனத்தாலே கஞ்சி குடிப்போர் மறைந்திடுவர்!
ஆலைச் சங்குபல அதிரும் விடியலிலே
வேலைக் கேகும் வினைவல்லார் பேரணிகள்!
உழைக்கா துண்டல் உலுத்தர்வழி! நீதி
பிழைக்காத வாழ்வே பெருவாழ் வெனநிற்பர்!

சந்தனத்தைப் பூசல் சாய்க்கடையைப் போக்கலிலே
எந்த உயர்விழிவும் எண்ணார்கள்! அழுக்கான
தொழிலாளி கந்தை துறவோர் கிழியாடை
பழியார்! மதிப்பாய்ப் பார்ப்பர்! இறைவற்குக்
கூட்டாளித் தொண்டன் கோலத் திருநீறும்
பாட்டாளி மேனிப் படரும் புழுதிகளும்
புனிதப் பொருளாய்ப் போற்றப் படும்! நல்ல
மனிதத் தன்மை மலிந்திங் கெழில்பூக்கும்!

சட்டத்தாற் கூடச் சமைக்க முடியாத
ஒட்டென்றால் ஒட்டும் ஒற்றுமையும் உருவாகும்!
இழுக்குச் செயல்கள் இல்லாமற் போவதனல்
வழக்கு மன்ற வாயில்கள் மூடிவிடும்!
துப்பறியும் நாய்கள், துப்பறியுஞ் சிங்கங்கள்
ஒப்பரிய ஆற்றல் ஒட்டடையுள் ஒய்ந்துவிடும்!

மன்னிக்கும் பண்பு மலையாய் வளர்ந்துவிடும்!
மின்னிக் கிடக்கும் மிளிரும் நறுங்கலைகள்!

கோயில் மணியின் குளிரோசை கேட்கையிலே
வாயில் தோறும் வணங்கும் குரல்பரவும்!

சொல்லுருவில் காதின் தொளைபுகுந்து சிந்தையிலே
அல்லிருளின் மைமல் அகல்வித்து வந்ததமிழ்
சிந்தை அறிவின் திருவுருவாய் நின்றதமிழ்
வந்த நினைவின் வடிவாய் மலர்ந்ததமிழ்

தன்னை யொப்பத் தனித்தியங்க வல்லமொழி
முன்னும் இல்லை! முளைக்கா தினிமேலும்
என்ற பெருமைக் கிலக்காகி நின்றதமிழ்
இன்று புகுந்த விஞ்ஞானம் இதற்குமுனம்
வந்து புகுந்த மதக்கொள்கை – இவையாலே
சொந்தச் சிறப்பாந் தூய்மை இழந்துவெறுங்
குப்பை மொழியாய்க் குழம்பி ஒலிப்பதனை
அற்ப மாற்றம் இதுவென்றும் ஆறியிரார்!
அறிவியலைக் கூறும் ஆங்கிலம்போல் மொழிகட்கும்
இறைநெறிகள் கூறிஇடந் தேடா ரியத்திற்கும்
ஏற்குஞ் சொற்கள் தமிழில் உருவாக்கி
நிற்கும் அறிஞர் – நிமிர்ந்த தமிழ்நெஞ்சர்
மிக்கு மலிவர்! விடியுந் தமிழுலகம்!

உணர்ச்சி என்னும் உருவற்ற கன்னியரைப்
புணர்ச்சி நிகழ்த்திப் புனைகவிதைப் பிள்ளைகளை
அப்பொழுதே நல்கும் அருங்கவிஞர், நாடெங்கும்
எப்பொழுதும் இன்பம் எழிலாட்சி புரியுமெனில்
சுவையிற் குளித்துச் சொட்டும் நயம்மிக்க
கவிதை செய்வர்! காவியங்கள் பாடிடுவர்!

கைபெற்ற குன்றம் கதைபெற்ற ஓர்மயிலை
மெய்பற்றித் தூக்கி மெய்யோ டணைப்பதனை,
மெத்தைத் தொடையின் மென்மடியில் தலைவைத்துப்
புத்தி கிளர்ந்து புத்துலகங் காண்பனை,

நூல்நூலாய் கற்று நுண்ணறிவு பெற்றவளே
மேல்மேலுங் கேட்க விழைந்தங் கருகினிலே
போய்க்குந்திக் கொள்ளப் புனைந்த புதுப்பாக்கள்
நாக்குஞ் சுரக்க நயந்தங் குரைப்பவனை,

வீட்டவளை நெஞ்ச மேட்டவளா யாக்கியவன்
ஏட்டவளாய் வண்ண ஓவியமாய் எழுதிவிட
கன்னி மயங்கிக் கனிச்சுவையால் அத்தானின்
கன்ன முறிஞ்சிக் களிப்பேற்றுங் காட்சியினை

பாடிப் பாடிப் பருகுஞ் சுவைஞர்க்குத்
தேடித் தேடித் திரிந்திங் களித்திடுவர்!

பஞ்சம் பாடிப் பசிபாடிப் பயன்மிக்க
கொஞ்சம் பாடும் குட்டிக் கவிஞர்கள்
எம்போ லியரும் ஏற்றம் புகழ்பெறுவர்,
நம்நாட்டி லிந்த நல்வாழ்வு வந்துதிக்க
வேண்டும்! என்ற விருப்போ டிருக்கைக்கு
மீண்டேன் தருக விடை!

# கணேசையா

சின்னையர் குடும்பம் செய்தவப் பயனுல்
செந்தமிழ் சிவநெறி காக்க
புன்னைமா நகரில் வந்தெழில் பொறித்த
புரவல னேகணே சையா!
தன்னலம் மட்டும் எண்ணிடும் மாந்தர்
தம்மிடைப் பிறர்நலம் பேண
இந்நிலம் வந்தாய்! இன்னலம் தந்தாய்!
ஏத்தினேம் நின்திரு வடிகள்.

அந்நியர் நெறியால் அன்னவர் மொழியால்
அல்லலுற் றேங்கிய எங்கள்
செந்நெறிச் சைவம் தீந்தமிழ்ச் செல்வம்
தேறிடச் செம்மையும் எய்த
பொன்னையே அன்றித் தன்னையும் தந்தான்
புவியினிற் சுவையெலாம் நீத்தான்
தென்னவர் செல்வன் நாவலன்! அன்னன்
திருமரு மகனிடம் முறையாய்,

கற்றனை தமிழும் சைவநற் பண்பும்!
கண்டனை மரபினை! அதனல்
குற்றமென் றெண்ணி முன்தமிழ் அறிஞர்
கூறிடா தொழிந்தவை விட்டாய்!
இற்றைநாள் எழுது கோல்பிடித் துள்ளோர்
இலக்கியப் புதுமையாய் இவற்றை
பெற்றதாய் அன்றே புளுகுவர்! பாவம்!
பேயரோ கேட்பவர் எல்லாம்?

அரசகே சரியின் இரகுவம் சத்திற்
சருமுரை செய்தனை! அன்றி
அருந்தமிழ்த் தொல்காப் பியப்பதிப் பிற்கும்
ஆற்றினய் தொண்டுகள போற்றி!
திருக்குற ள பரிமே லழகரின் உரையில்
செய்தனை விளக்கமும்! அன்றி
தருக்குற ராமா யணமெனும் நூலின்
தன்மைகள் ஆய்ந்துரை செய்தாய்.

பள்ளிகள் வைத்தாய்! பண்டிதர் நடுவே
பண்டிதத் தலைவனு யமர்ந்தாய்!
கள்ளிலே மயங்கும் வண்டெனத் தமிழின்
காதலால் ஆவலாய் அலைந்தாய்!
எள்ளிலே இன்ப இல்லறந் தன்னை!
ஏற்றனை அதனையும்! ஈற்றில்
உள்ளதை விற்று மஞ்சனக் கிணறும்
உலகமே வியந்திடத் தொட்டாய்!


கடவுளென் றுண்டோ? கண்டவர் உண்டோ
காட்டுக? என்பதன் மூலம்
மடையரின் நடுவில் மனனனுய் உலவி
வந்திடும் வீரரைப் போல
"திடமிகும்" புரட்சி செய்திலை! ஆனால்
செய்தனை தெய்வநற் பணிகள!
கடன்வழிக் கின்றிக் களிப்பொடே வந்தோம்
கடலென நின்புகழ் பாட!

பற்பல நாள்பல லட்சியம் ஆண்டாய்
பைந்தமிழ்ச் சநததி பாரில்
போற்புள வென்றே பட்டறி வாலே
புரிந்தறிந் தேற்றிடும் நேர்மைக்
கற்பெனும் பண்பும் காதலின் இன்பும
கடவுளைத் தொழுதிடும் மாணபும்
கற்பனை போலிக் கதைகளே என்று
கதைத்திடும் ஓர்திருக் கூட்டம்.

மக்களுக் காக இலக்கியம் செயுமிம்
மன்னரோ ஓர்மொழி கேளார்!
எக்கருத் தேனும் மாக்களிற் பார்க்க
எங்களை உயர்த்திடா தென்னில்
அக்கருத் தெல்லாம் அழிவையே செய்யும்!
ஆக்கமென் றொன்றுமே செய்யா!
மக்களுக் கென்னும் வார்த்தையை மாற்றி
மாக்களுக் கென்பதே ஏற்கும்.

சாலதையில தெளியார் சீர்மிகும் பாதை
தேர்ந்திடார்! தேர்ந்திடல் விரும்பார்!
மந்தைகள் போல மற்றவர் பின்னே
வாய்திறக் காமலே செல்வோர்,
பந்தமே பிடித்து வாழ்ந்திட முயல்வோர்,
பதவியில் குந்திடத் துடிப்போர்
வந்திடில் எழுதித் திருத்திட நாட்டை —
வாழ்வதும் எங்ஙனம் ஐயா?

ஐயநின் நாமம் வாழ்கவே! உன்றன்
அரும்பணித் தொண்டுகள் வாழ்க!
பொய்மைகள் கோலப் போலிகள் ஏய்க்காப்
புத்தியில் நம்மவர் வாழ்க!
மெய்மையும் குறளின் நீதியும் வாழ்க!
வீரமுந் தியாகமும் வாழ்க!
வையகம் வாழும் பைந்தமிழ்க் குடிகள்
மானமார் வீரராய் வாழ்க!



# குயிலே கூவு!

நுங்குகளின் தங்கநிகர் குலைகள் தொங்க
நூற்றுவரின் கண்கனிந்து நோக்குங் காலம்!
மங்கையரின் கொங்கைநிகர் தெங்கின் காய்கள்
வான்நிறைந்து குலைகுலையாய்த் தொங்குங் காலம்!
பொங்கிவரும் திங்களொளிப் பொலியுங் கீற்றுப்
போய்ப்புகுந்து டலகணிக்குள் பாயுங் காலம்!
கொங்கலரும் பூப்பொலியுங் குமரிக் கோலக்
கொஞ்சுதளிர் மிஞ்சுமிள வேனிற் காலம்!

பூக்குடைந்து புதுத்தேனை மாந்திக் கொண்டு
பூங்கிளையிற் போய்க்குந்திக் களிப்புப் பொங்க
கூக்குக்கூ எனக்கூவும் குயிலே! உன்றன்
குளிரோசைக் கூவல்கள் உணர்ச்சி மோத
கேட்பதெனில் யார்க்குத்தான் விருப்பம் இல்லை?
கேட்கத்தான் பலருக்குத் தகைமை இல்லை!
ஊக்கமுடன் குறிக்கோள்கொண் டுழைப்போர் மட்டும்
உன்குரலின் சுவைமாந்தும் தகைமை கொண்டார்!

வன்னியிலே நிலம்பெற்றான்! குடிசை வைத்தான்!
மண்டிவளர் மரஞ்செடிகள் மயமாய் நின்ற
வன்னிலமும் பொன்னிலமாய் மாறும் வண்ணம்
மாட்டோடு மாடாக உழைத்தான்! சுட்டே
இன்னல்தரும் வெயிலென்ன? மழைகாற் றென்ன?
ஏற்றங்கே இரவுபகல் உழைத்தான்! பாளைச்
செந்நெல்தரு வயல்கண்டான்! செழிப்புக் கண்டான்!
சிந்தையெலாம் தேன்மாரி பொழியக் கண்டான்!

கதிரெடுத்த நெல்முற்றிச் சாயக் கண்டான்!
கதிரெறித்த வெயில்கண்டான்! தொழுதான் வானை!
புதிரெடுத்தான்! புத்தரிசிப் பொங்கல் வைத்தான்!
பொன்வயலில் நெல்மலையைக் குவித்தான்! இன்றோ
விதைவிதைக்கச் சிறுபோகம் மழையை நோக்கி
விடியல்தொறும் விழித்தெழுவான்! மானங் காக்கும்
மதிபடைத்த மனிதன்கண் விழிக்கும் போது
மாத்திருந்தா கின்பவொளி பாயக் கூடவு!

பள்ளிதொறும் பள்ளிதொறும் நூல்கள் ஏந்திப்
படிக்காத படிப்பெல்லாம் படித்தான் ஓராள்!
உள்ளகமத் தொழில்செய்ய மாட்டான்! வெட்கம்!
ஒருதொழிலும் கற்கவில்லை! பெற்றார் சோற்றை
என்னளவும் நாணுமல் ஏற்றுண் கின்றான்!
இரவெல்லாம் தெருச்சுற்றல்! பகலில் தூக்கம்!
கள்ளமிகு மிவன்கேட்பன் விரைவில் வீட்டில்
கத்துவதைப் பாழ்ச்சுடலைக் குருவி! பாவம்!

கல்கொண்ட காடெல்லாம் யாழ்ப்பா ணத்தில்
கவனிப்பா ரில்லாமல் கிடத்தல் கண்டார்
கல்நின்ற தோளுடையார்! சிலர்முன் நின்று
காசுக்கே அவையெல்லாம் மலிவாய் வாங்கி
வில்லங்கப் பட்டெல்லாக் கல்லும் நீக்கி
விளைபூமி யாக்குகிறார்! அயர்வில் மூழ்கிச்
செல்கின்றார் படுக்கைக்கு! விடியும் போது
சிந்தைக்குள் இனிப்பேறக் குயிலே கூவு!

ஒருசட்டை! நாலுமுழம்! நாளும் தோய்த்தே
உடுக்கின்றான் ஒருவாத்தி! நேரம் காசை
ஒருகெட்ட வழியினிலும் செலவே செய்யான்!
ஒழுக்கத்தில் ஒப்பற்றான்! ஓய்வை எல்லாம்
பெருகட்டும் நம்மொழியின் கலைகள் என்னும்
பெருநோக்கில் கரைக்கின்றான்! தமிழன் மேன்மை
மெருகுற்றிங் கோங்கஅவன் விழிக்கும் இன்ப
விடியல்தொறும் மெல்லெனவே கூவாய் அங்கே.

பட்டமெனில் பண்டிதர்கள், வித்து வான்கள்!
படித்ததற்குப் பயன்,எதுவும் எழுதச் சோம்பல்!
தொட்டெழுத நல்லதையும் அச்சம்! வாழும்
தொண்டுதமிழ்க் காற்றிடவும் ஆர்வம் இல்லை!
முட்டையிலே மயிர்பிடுங்கி எரிச்சல் கொள்வர்,
முன்னின்றி லக்கியங்கள் செய்வோர் மீது!
விட்டிடுவோம் இதையெல்லாம்! ஒவ்வோர் மூச்சும்
விட்டிடுவோம் தமிழுக்கென் றெழும்பக் கூவு!

பாட்டெழுதிக் கதையெழுதித் தோற்றோர் இங்கே
　　பட்டத்தில் இரசிகமணி! சிரிப்பே! கள்ளிக்
காட்டிடையில் முள்ளெனவே கயமை செய்வார்!
　　கற்றோரே அறிவார்கள்! காலஞ் சொல்லும்!
மாட்டிடையத் தொழிலுக்கும் தகைமை அற்றோர்
　　மதிப்புரையில் மணிகள்! பார் குயிலே! நொண்டி
ஆட்டத்தால் கூழையரும் மனிதத் தோற்றம்
　　அடைகின்றார்! எத்தனைநாள் இந்தக் கூத்து?

கோயிலிலே ஆடுவெட்டல் சரியே என்று
　　கூத்தியைப்போல் காசுக்கு வழக்குப் பேசி
நாயினுக்கும் இழிந்தவராய், கூத்தி மாரை
　　நாலைந்தில் மேலாகத் தழுவிக் கொண்டு
வாயினிக்கப் பிரசங்கஞ் செய்வர்! அன்றி
　　வடமொழியில் பகட்டாகப் பூசை செய்வர்!
போயிவர்க்கும் "சைவத்தைக் காப்போர்" என்று
　　பொன்னாடை போர்ப்பார்போல் கூவல் வேண்டாம்!

கஞ்சிக்கு முன்வீட்டுத் தமிழன் ஏங்க
　　கனியுண்டு, பாலுண்டு, மனையாள் பூசும்
பஞ்சிக்கும் பட்டுக்கும் பணத்தைக் கொட்டப்
　　பரிவின்றிக் கடைக்கொருவன் செல்வான்! உண்மை
நெஞ்சிற்கும் நேர்மைக்கும் பணிதல் செய்யான்!
　　நெறியற்றோர் புகழ்ச்சிக்கோ பணிவன் நன்றாய்!
பஞ்சத்தைத் தமிழர்க்குள் பரப்பும் இந்தப்
　　பாவிக்கா உன்இனிய பாடல்? வேண்டாம்!

பிற்போக்கு முற்போக்குக் கூச்சல் போட்டுப்
பிரிபட்டார்! அடிபட்டு வீணில் நொந்தார்!
கற்போர்க்குத் தரமான நூல்கள் செய்யார்!
கண்ணயர்ந்து தூங்குகிறார் எழுத்தா ளர்கள்!
சொற்போர்க்குக் கிளம்போமென் றுறுதி பூண்டு
துடிப்போடும் நூலாக்கத் தொடங்கல் வேண்டும்!
நற்போக்கில் எதிர்காலம் அமைதல் வேண்டும்!
நயம்பொங்க நலம்பொங்கக் குயிலே கூவு!

தமிழர்க்குள் சுறுசுறுப்பு மிளிரக் கூவு!
தமிழர்தம் தனித்தன்மை ஓங்கக் கூவு!
குமிழியிடும் பொன்வெள்ளம் போலும் பாட்டுக்
குளிர்ந்துலவத் தமிழினிலே குழைந்து கூவு!
சிமிழ்தமிழில் அடங்காத செஞ்சாந் தாகச்
செந்தமிழர் புகழ்மண்ணில் வீங்கக் கூவு!
கமழ்ந்தெங்கும் உலகெல்லாம் வாழும் நம்மோர்
கைகோத்து நெஞ்சொன்றி வாழக் கூவு!



# குறட்டைக் கலைஞன்!

குறட்டைக் கலைஞன்! குவிந்த விழியன்
சிறுத்தைப் புலியன்! திரண்டு — கறுத்தோங்கு
மேனி! எனிலும் விளங்கும் மனமுடையன்!
கூனல் குலவாக் குணமன்னன் — வானும்
நடுங்கும் மறவன்! நறவும் அருந்தி
விடிந்தும் விடியா துறங்கிக் — கிடந்தும்
அறத்தை அறிந்தோன்! அருங்கடமை வீரன்
திறத்தைச் சிறிதிங்கு செப்ப — பொறுப்புணர்வோ
டேற்றேன்! எழுத அமர்ந்தேன் கவியருவி
ஊற்றுக் குமுறி உணர்ச்சியலை — ஆற்றலுடன்
தாவி யெழுந்திந்தத் தாளை நிரப்பியது!
தூவெண் மனத்தானைச் சொல்லிடினும் — யாவும்
சுவையடக்கிச் சொட்டாத சொத்தைக் கவிகள்!
அவையடக்கங் கூறுமை அச்சம் — இவையடக்கிப்
போற்றும் பொருளில் புரைகள் பொதுளுமெனில்
ஆற்றிப் பொறுத்தல் அறம்.

கும்ப கருண குன்றெடுத்த ராவணர்கள்
தம்பி தமையன்! தறுகண் மறக்குலத்தில்
ஒருவயிற்றுப் பூத்த உறவுமுறை! என்றாலும்
பெருவயிற்றோன் தம்பி! பேய்ப்பசியன்! நீங்கரிய
உறக்கப் பிணியான்! ஓய்ந்து கிடந்திடுவோன்.
சிறக்கும் வீரத் திறங்கள் இருட்டினிலே!

மறைக்குந் திரைதான் வந்துள்ள பாழ்த்தூக்கம்!
மறப்பில் அலுப்பில் மயங்கிக் கிடக்கின்ற
இந்த நிலையில், இழிவைத் தழுவிமனம்
வெந்த நிலையில் தானும் விரட்டாமல்
கள்ளுந் தீனுங் கனிந்தூட்டி வருமண்ணன்
உள்ளங் கனிந்துள் ளுவந்து தழுவிடுவோன்!

அண்ணன் அன்பை அருள்கூருந் தண்ணளியை
எண்ணிப் பருகி இதயம் நெகிழ்ந்த இவன்
நன்றிப் பண்பில் நனைந்து கிடந்ததனுல்
குன்றுக் குலங்கள் குலுங்குமிரு தோள்பெற்றுன்.
விரிந்த மார்பும் விளங்குங் துணைவூற்றுச்
சுரந்து பொலிந்த தூமனமும் ஏந்திட்டான்!

சடையப்பன் என்னுங் கொடையப்பன்– ஓங்குபுகழ்
உடையப்பன் இட்ட உணவில் வளர்ந்தவனே
செல்லக் கவிஞன்! திகட்டாத கவிதைவயல்!
சொல்லைக் கள்ளில் தோய்த்துக் கவிசொன்னேன்!
வெல்லப் பிறந்த வெறிமனத்துப் பெருங்கம்பன்!
நல்லன்! நன்றி யுணர்வின் மறுவடிவம்!
வள்ளல் கஞ்சி வளத்தை நினைந்துருகி
வெள்ளக் கதிப்பு விசைக்குங் கவிபெற்ற
நன்றிக் கவிஞன் நன்றியுடை ஓராளை
கும்ப கருணக் குணமலையைப் பாடுகையில்
கெம்பி எழுந்து கிலுங்குங் கவிதையொலி!

சோற்றுக் கடனாய் அண்ணற்குத் தொண்டுசெய
ஏற்றுக் கொண்ட ஏந்தல் அதுவன்றி,
கொண்ட பெண்ணைக் கூத்திமுறை உறவிற்கென்
றண்டை மனிதன் அடைத்துவைத்த ஒரிகழ்வில்
எரிந்து குமுறும் இராமன் மனநிலையைப்
புரிந்து நெஞ்சம் புழுங்கத் தவறவில்லை!
அண்ணற் குறுதி அளிக்கும் அறங்களினை
எண்ணி விளங்கி எடுத்தோத அஞ்சவில்லை.
தம்பி தொடைநடுங்கி சாற்றியது போதும்போ!
வெம்போர் புரிய வீரம் உனக்கில்லை!

போய்நன்கு தின்று போர்த்துக் கிட!என்று
நோய்செய் மொழிகள் நுவலுந் தமையன்முன்
அண்ணா! செல்வேன் அடுத்தகணம் போர்க்களமே!
புண்ணால் மாற்றார் வேல்புதைந்த புண்ணாலே
செத்து மடிந்து தீர்ந்திடுவேன்! பின்னேனும்
பித்து வெறியிற் பிடித்திங்கு வைத்துள்ள
கற்பின் திருவைக் கைவிடுக! கைவிட்டுன்
அற்பப் பெயரை அழித்துச் சிறந்திடுக!
என்றுரைத்துப் போரில் இறங்கத் தயங்கவில்லை
இன்றுமட்டும் ஓங்கி இசைபரப்பும் புலத்தியரின்
குலப்பெருமை பட்டுக் குற்றுயிராய் வீழ்வதற்குங்
கலக்கமிகக் கொண்டு கலுழ்ந்திடவும் பிந்தவில்லை!

மாற்றார் படையை வானரஞ்சூழ் மானிடரை
கூற்றார் இராமன் கூட்டத்தைச் சார்ந்துள்ள
தம்பி விபீடணனைச் சந்திக்கும் வேளையிலே

வெம்பி யழவும் வீழ்கின்ற தம்மரபில்
தப்பி நிலைத்துத் தழைபொதுளப் போகுமொரு
கொப்பி தெனவே கொண்டிடவும் நாணவிலை!

பிழையா அறத்தின் பெருஞ்சேவை செய்யத்தன்
னுழையான் ஒருவன் உளனென் றுவக்கின்றான்!

இருந்தும் தம்பி இராமன் அணிதன்னை
பொருந்தும் வண்ணம் புகலும் பொழுதினிலோ

"நீர்க்கோல வாழ்வைநச்சி நெடிதுநாள் வளர்த்துப்பின்னர்
போர்க்கோலஞ் செய்துவிட் டார்க் குயிர்கொடா தங்குப்போகேன்"

என்று முழங்கி எழுந்து குமுறுகிறான்!
நின்றானு அம்மட்டில் நிகழ்த்திய துண்டின்னும்!

"செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி
வம்பிட்ட தெரியல் எம்முன் உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோ டைய
கும்பிட்டு வாழ்கில் லேன்யான் கூற்றையும்ஆடல்கொண்டேன்".

என்று கொதித்து மானக்குரல் எழுப்பி
நின்று குமையும் நீர்மை இனிப்பன்றோ?

எப்படியும் அண்ணன் ஈந்த சுகம்மறந்து
கொப்பொடியும் போது குரங்கெட்டிப் பாய்வதுபோல்
தவறிக் கொள்ளுஞ் சறுக்கல் மனப்பான்மை
இவனுக்கில்லை! இறுக்கம் இவன் நேர்மை!

**உண்ட சோற்றை அண்ணன்கை ஊட்டிவர**
**உண்ட சோற்றை நினைந்தான் உயர்வுற்றான்!**
**உண்ணப் போகும் உண்டி நினைந்தவனோ**
**எண்ணப் பட்டான் இழிவாகக் கேவலமாய்!**

நல்லுணர்ச்சி ஒன்றின் நயப்பில் அறமூழ்கி
கொல்லுதற்கு நல்ல குணம்பிறவை நில்லாமல்
ஏற்றப் பண்பை எல்லாம் நயக்கின்ற
ஆற்றல் படைத்த அறிஞன் இவனைப்போய்,

அரக்கர் மகனாய் – அறம்போற்றாக் கேவலமாய்-
இரக்கங் கெட்ட இரும்புருவாய்- புலவுமணம்
நாறும் வாயும் அமரர் நடுக்கமுறச்
சீறுஞ் சினமுஞ் சேர்ந்தவனாய்ச் செப்பிடவே
முனைந்துங் கம்பன் முழுத்தோல்விக் காளானான்!
புனைந்த கவியில் பொய்யா மனத்தானைத்
தான்நினைந்து போற்றத் தவறிடினும் இன்பநறுந்
தேன்நனைந்தே அந்தப் பகுதி திகழ்கிறது!

கோட்டை! அரண்கள்! கொடிபடைகள்! ஆளணிகள்!
நாட்டின் தலைவன்! நாற்றிசையும் புகழ்வைத்தோன்!
என்ற நிலையிலி ராவணற்கே உறவென்று
நின்று பிறகு நிலைகுன்றிப் போரிலவன்
வீரம் இழந்து வீழ்ந்துபடும் வேளையிலே
தாரில் பழம்பூ தமைநார் உதிர்த்தல்போல்,
நீர்ப்பறவை போல நீங்கிப் பிரிந்திடவா?
போர்க்களத்து வீழ்வேன் பொருது மடிந்தென்று
செப்பிச் சிறந்தோன் திறன்சொன்னேன்! அவையீர்காள்
தப்புண்டேல் மன்னிப்பீர் தாங்கி!

# தங்கத் தாத்தா!

சூழுங் கடற்பெண் சுவைத்துத் தழுவிமகிழ்
ஈழம் என்னும் எழில்நாடு மணித்தீவு
தாய்நா டெமக்கு! தமிழ்பேணுந் தென்னவர்க்குச்
சேய்நாடு! பிள்ளைத் திருநாடு! பண்பார்ந்த
இந்தப் புகழ்நாட் டென்றிருந்தோ செந்தமிழர்
நொந்துநொந்து நோற்ற பேருகச் செந்தமிழும்
உயிர்க்குறுதி கூறும் ஒப்பற்ற ஓர்நெறியும்
உயிர்த்தெழவும் ஓங்கி ஒளிதரவும் வந்துற்றான்
ஓர்புலவன்! ஒப்பில் தமிழின் சுவையெல்லாம்
தேர்புலவன்! வாழ்வின் குறியுணர்ந்தோன்! செப்பவனே
காதல் பாடிக் கசிந்துள் ளுருகினன்! ஆம்!
காதல் என்றால் எக்காதல்? கல்லினிலே —

பொழிந்திட்ட சிற்பம் பொலிந்தவுடல்! மாங்கனிகள்
பழம்பழுத்துச் செம்மை படர்ந்து கனிந்திட்ட
மாதுளையின் கன்னம்! மதுச்சுளைபோல் பூவிதழ்கள்!
காதளக்குங் கண்கள்! கவின்புருவம்! பைங்குரும்பைப்
பிஞ்சு பிடிக்கும் நெஞ்சழகு! புணர்ச்சியிலே
குஞ்சி விரிக்கும் குழற்கொண்டை! கஞ்சமலர்க்
காலடிகள் நூலிடையில் கட்டிவரும் பட்டாடைச்
சேலையிடுஞ் சந்தச் சிலுசிலுப்பு! சோளம்பூச்
சொரிந்ததுவோ! பாளை பிரிந்ததுவோ! மின்னல்
தெரிந்ததுவோ! என்னுந் திகழ்சிரிப்பு! உடல்தாங்கும்
வண்டுண்ணுக் காய்கள் மணங்குலவாக் கண்மலர்கள்
திண்டாடச் செல்லும் நடையழகு! கொண்டாடும்
செந்தண்பூக் கைகள்! செம்பவள விரல்! இவற்றில்
இந்தப் புலவன் எண்ணம் மயங்கவில்லை!
சிற்றின்பக் காதலிது! செம்புலவன் கொண்டதுவோ
மற்றொன்று தெய்வத் தலைவன்மாட் டாகியது!

நூற்றுக் கணக்கில் நோய்மலிந்து நலிகின்ற
நாற்றப் பாண்டம் நம்முடல்கள்! நாள்தோறும்
கூற்றம் நினைந்த குலைநடுக்கம்! நெஞ்சத்தைச்
சேற்றின் கெடுக்கும் தீங்கான சிந்தனைகள்!
வஞ்சகங்கள்! வற்ரு அழுக்காறு! தாழ்வுணர்ச்சி!
சஞ்சலங்கள்! சூழ்ச்சி! சச்சரவு! என்பவற்றின்
உருவகமாய் நிற்கும் உதவாக் கரைவாழ்வைப்
பெரியதென எண்ணுப் பெருந்தகையார் இப்புலவர்!

ஞானச் சுடர்விளக்கின் நலங்கண் டகத்தேற்றி,
ஈனத் தனமாம் இருள்கடிந்த ஒரிறையை
தேனைப் பாலைச் செழுங்கனியைத் தீம்பாகை
ஊனில் உயிரில் உளத்தில் கலந்துவிடும்
இனிமைக் கரசை! இறையை! இதயக்கல்
கனியக் கனிய நினைந்து கவிசொன்னுர்.

சிவனய் முருகாய்த் திருமாலாய் ஆனைமுகத்
தவனய்ச் சத்தித் திருத்தாயாய் உருமலர்ந்த
ஆண்டவன்மேல் பதிகம் அந்தாதி பத்துக்கள்
நீண்டும் இனிமை நிகழ்த்துதிருத் தோத்திரங்கள்
பிள்ளைத் தமிழ்கள் பெருகப் புனைந்தாக்கித்
தெள்ளு தமிழில் தெய்வஒளி சிந்தலுடன்
ஈழச் சைவக் கோயில்கள் ஏராளம்
வாழும் பெயர்க்கு வழியமைத்த இப்புலவன்
தங்கத் தாத்தா, தமிழ்க்கொண்டல், சைவத்தை
இங்கு வளர்த்த இணையற்றோன்! உண்மையிலே
நாவால் தமிழ்சைவம் நாட்டிட்டார் நாவலனுர்!
பாவால் தமிழ்சைவம் பரப்பிட்டார் இப்புலவர்!
தவப்பேறு நாவலனுர் தழைதாடிச் சுந்தரரும்
அலர்க்கொப்ப ஈழம் அளித்த தவப்பேறே!
வாழியரோ இப்புலவன் வளர்த்த இறைவனெறி
வாழியஇங் கேயவனை வரவைத்த பெருமைமிகு
ஊராம் நவாலி உறைகின்ற செந்தமிழர்
தாரீர் விடையும்! சரி!

# வான்புகழ் வள்ளுவன்!

வான்புகழும் வள்ளுவனைப் பற்றியொரு பாட்டு
யான்எழுதி ஏழாலை அரங்கில்போய்ப் பாட
வேண்டுமெனும் நினைவினிலே மெய்மறந் திருந்தேன்.
ஈண்டுகுறள் ஏற்றமுடன் எங்கணுமே சென்று
பெருமொழிகள் யாவிலுமே பெயர்த்தெழுதப் பட்டு
வருவதனை நோக்குங்கால் வருஞ்சிலநூ ற்ண்டில்
வள்ளுவமென் றோர்நெறியே மண்ணுலகில் எங்கும்
உள்ளதெனும் நிலைவரவுங் கூடுமிது உண்மை!
மண்ணுலகில் வள்ளுவமே வாழுநிலை தோன்றில்
விண்ணுலகம் மேவிடுவோர் மிகுவரத ஞலே
வானின்று வள்ளுவனை வாழ்த்திடுவ தைப்போல்
மேன்மேலும் பன்மடங்கு வியந்திடுதல் கூடும்.

செய்நிலவின் திறன்மிக்க செயல்பெருக லாலே
மெய்நிலவில் மிகுவிரைவில் குடியேறி மாந்தர்
வள்ளுவனின் வண்குறளை வழங்கிடுதல் கூடும்!
உள்ளபிற செவ்வாயாம் ஒள்ளியகோள் தோறும்
கொண்டெடுத்துச் சென்றுபுகழ் நாட்டிடவுங் கூடும்.
மண்டலங்கள் யாவிலுமே வள்ளுவனை வாழ்த்தில்
வான்புகழும் வள்ளுவனே யாவானே அன்றே?
ஏன்பிறகு கதை! தமிழர்க் கிணையில்லாப் பேரே!

இப்படிநான் எண்ணிஇது எய்துமென ஒய்ந்தேன்.
அப்படியே நினைவினிலே ஆடிவந்து நிற்கும்

> " செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
> செய்யாமை யானுங் கெடும் ".

என்றகுறள் எடுத்தங்கே ஆராய லுற்றேன்.
நன்றியம்பு மிச்செய்யுள் நல்குபொருள் யாது?

செய்வதனுல் தீமைதரும் தீயசெயல்! அன்றிச்
செய்வதற்கென் றுள்ளதனைச் செய்யாமல் விடலும்
ஒருவனைப்பா ழாக்குமெனல் உட்பொருள தற்கு!
திருவிடத்துச் செந்தமிழர் செயத்தக்க தென்ன
இன்றென்றங் கெண்ணிட்டேன்! எழுந்ததொரு எண்ணம்
அன்ருெருகால் நந்தமிழர் ஆண்டிகளாய் ஈன்ற
மண்பிரிந்து கண்கலங்கி வத்தைகளி லேறி
அயல்நாடு பலவிற்கும் அகன்ருர்க ளென்ருே?
செயத்தக்க செய்யாமல் செந்தமிழ நாட்டார்
உடன்பிறந்த தம்பிதங்கை ஒத்தவர்கள் எங்கோ
உடைந்தமனத் தோடகல ஊமைகளாய் நின்ருர்!
மரக்கட்டைத் தமிழர்கள் இரக்கமற்ற நெஞ்சர்
தடுத்தவரைக் காக்காத தண்ணளியில் போக்கால்
அடுத்தந்த நாடுகளில் அவர்பட்ட பாடு
கொஞ்சமல! என்பதனைச் செய்திபல கூறும்!
பஞ்சமெலாம் பட்டபின்பு படிப்படியாய் அன்னோர்
கொஞ்சமின்று நல்லநிலை கொஞ்சிவரு கின்ருர்!
நெஞ்சமெலாம் தமிழ்நினைவு நிறைந்தோர்க ளாக
நிற்கின்ருர் இன்றைக்கும்! நிலைத்ததமிழ் சைவப்
பற்றினராய் வாழ்கின்ருர்! பாவமவர் கற்க
ஏற்றதமிழ் நூலங்கே இல்லை!இவை யெல்லாம்
ஏற்றியவர் நாடுகளுக் கெம்மவர்கள் கப்பல்
தமிலனுப்பி வைப்பதற்கும் தகுதியிலர் தாமோ?
தமிழ்தமிழென் றிங்கெல்லாம் சாகின்ருர் பொய்யே!

தென்னமெரிக் காவிலுள சிறுகயனு நாட்டில்
தென்னவர்நம் தமிழினமே தேர்கபெரும் பான்மை!
அன்னவர்கள் தம்நாடு விடுதலைபெற் றங்கு
முன்னேற வழியின்று முகிழ்த்துளது! பாரீர்!

அவுத்ரேலி யாவருகில் அமைந்தபிசித் தீவில்
இவரெங்கள் தமிழர்கள் இன்றுபெரும் பான்மை!
மோரிசு ஆபிரிக்க முனையருகோர் தீவு!
பாரீரோ அங்குபெரும் பான்மையர்நம் தமிழர்!

உலகிலுள தமிழரிடை உலகமுள மட்டும்
நிலைபெறநம் பண்பாடும் நெஞ்சுகவர் தமிழும்
உழைப்பதற்கென் றொருமன்றம் உள்ளபடி தேவை.
விழித்தமுதல் தமிழர்கள் விழைந்தொன்று சேர்ந்து
செயத்தக்க செயலாக நிறுவிட்டார் தமிழர்
உயத்தக்க ஓர்கழகம் — உலகதமிழ் மன்றம்!

இம்மன்றம் மலேயாவாம் இன்றமிழர் நாட்டில்
செம்மையுடன் உருவாகித் திகழ்கிறது! ஆங்கே
தலைமையகம் உள்ளதுவாம்! தமிழர்பல நாடும்
பலவகையில் கைகோத்துப் பைந்தமிழை ஓம்ப
வழிவகைகள் செய்யமகிழ் வாகஉழைத் திடுவோம்!
விழிதிறந்து விரைந்ததிலே உறுப்புரிமை பூண்டு
உயர்ந்ததமிழ்ப் பணிசெய்து ஓங்கிடுவோம் வாரீர்!
நயந்ததுய்பு தமிழ்நூல்கள் நாற்றிசையும் பொங்க
பார்மலியும் நம்மிடையே பைந்தமிழை ஓம்பி
ஆர்வமுடன் பாடுபடல் அரியகடன் வாரீர்!
உலகதமிழ் மன்றத்தில் உறுப்பினர்க ளாவோம்
நிலவுபுகழ் வள்ளுவரின் நெஞ்சுகவர் நோக்கில்!



# வாழ வழி வகுப்போம்!

திரண்டு பருத்துச் செழிக்குந் தொடைபெற்று
மருண்டு விழிக்கும் மான்குலத்தை, கண்கொள்ளா
எழிலைத் தாங்கும் இணையில் பசுங்கிளிகள்
பட்டாய் மினுங்கும் பருவப் புருக்களெனும்
எட்டிப் பறந்தே ஏறி விசும்புலவும்
கட்டுக் கடங்காக் களிகொள் பறவைசளை
கெட்ட மனிதர் கீழ்த்தனத்துக் கொள்கையுடன்
சுட்டு விழுத்திச் சுவைகூட்டி உண்கின்றார்,
சட்ட மியற்றித் தடுத்தாலும் விடமாட்டார்!
பின்னர் ஒருகாலம் பேருலகில் மானினமும்
இன்னும் பறவை இனம்பலவும் மாண்டொழிந்து
போதல் கூடும்! ஆதலினால் இவைகளைநம்
பாட்டில் எனிலும் பாருள்ள வரைநிற்க
நாட்டிடுவோம் நாளும் வாழும் வழிசெய்வோம்.

கணவன் என்போன் கட்டியபெண் ணைத்தவிரக்
கணமும் பிறளைக் கருதாமை, நோக்காமை.
மனையாள், தன்னை மற்றெந்த ஆடவனும்
நினையா வண்ணம் நிறைவாய் ஒழுகிடுதல்,
கன்னியரும், சற்பைக் கட்டழிக்க வல்லவற்றை
உன்னி உணர்ந்திங் கொதுங்கி நடந்திடுதல்,
காளையரும் தம்மைக் கட்டி ஒழுகில்தான்,
நாளைவரும் இல்லாள் நல்லவளாய்ச் சேர்வளென
உள்ளந் தெளிந்தென்றும் ஒதுங்கி நடத்தல்,எலாம்
எள்ளத் தனையும் இருக்கா தொருகாலம்!

அக்காலம், இந்த அழிந்த ஒழுக்கங்கள்
நிற்கட்டும் ஏட்டில் நிறைந்தேனும் எனவெண்ணி,
வாழ வழிசெய்வோம் வண்ணக் கவிகளிலே!

மீறும் உணர்ச்சி விழிப்போடு போராடி
சீறும் நெருப்பாய்த் தீங்குகளைச் சுட்டெரிக்கும்
வீறும் பொறையும் விளங்கும் மடந்தையர்மேல்
நூறில் மேலாய் நூல்கள் புனைந்திடுவோம்!
தாய்க்குலத்தின் கற்பைத் தாமே அழித்துப்பின்
பேய்க்குலமென் றேசும் 'பித்'தில்லாப் பெரியோரை
வாழ்வின் குறிக்கோள் மறுவின்றி வாழ்வதெனும்
தாழ்வில் குணத்தோர் தமைஏத்திப் பாடிடுவோம்!

பற்றும் வெறுப்பும் பார்க்காமல், நீதியையே
பற்றி நடக்கும் பண்பட்ட மனச்சான்றும்
சிறுமை மனிதர் சிற்றிதயங் கள்தோறும்
சிறிது சிறிதாய்ச் செத்துவரல் காணீரோ?
ஒருநாள் ஒழியப் போகும் மனச்சான்றும்,
ஒருவர் கூட உண்மையுளம் அற்றவராய்
வாழும் அந்த மாண்பற்ற காலத்தும்
வாழ, கவியில் என்றாலும் வழிசெய்வோம்.

செய்யும் எந்தச் சின்னஞ் சிறுசெயற்கும்
ஐயன் இறைவன் அளிப்பன் பயன்திடமாய்!
எண்ணும் எந்த இழிந்த நினைவிற்கும்
திண்ணம் நாங்கள் திண்டாடப் போவதுவும்!
என்ற அந்த இணையில்லா நம்பிக்கை
இன்று பலர்க்குள் இல்லாமை பாருங்கள்!
செல்ல இன்னுஞ் சிலகாலம், ஒருவர்க்கும்
நல்ல இந்த நம்பிக்கை இல்லாமற்

சாதல் கூடும்! தடியர் மயமாகிப்
போதல் கூடும் புவிவாழ்க்கை! அக்காலம்
பழிநீக்கல் பாட்டுக் களிலேனும் வாழும்
வழிசெய்ய வேண்டும் வல்ல கவிஞர்கள்.
தன்னைத் தானே சுற்றிச் சுழலலுடன்
பொன்னைக் கதிராய் பொலிவிக்குஞ் செங்கதிரான்
சூரியனைக் கூடத் தூரத்தாற் சுற்றிவரும்
சீரடங்கும் வாழ்வுச் சிறுபூமி ஒருகாலம்,
சூரியனைக் கிட்டிச், சூடேறி அழிவதுபோல்
பாருங்கள் மாந்தர் பரம்பரையும் பாழாகி
ஒருகாலம் நாயில் உதவாத தாகிடலாம்,
மிருக நிலைக்கு மீண்டும் இழிந்திடலாம்!

ஆதலினால் பண்பில் அழியும் மனிதர்களை
நீதியிலாப் போக்கில் நிலைப்பிக்க நிற்பவர்காள்!
உலகிற் குயர்ந்த ஒழுக்கஞ் சுவைகளெலாம்
நிலவும் கவிகள் நிறையப் புனைந்துலகம்
வாழ வழிவகுப்போம் வாருங்கள்! நடவாதேல்
வாழச் செய்வோம் மாணிக்கப் பண்புகளை
வீழல் தவிர்ந்து விளங்கும்பாக் களிலேனும்!
ஆக்கப் பணிகள் அறிவீர் இவைகள்தான்!
மூக்கைப் பிடிக்கும் முறைகெட்ட நாற்றமெழும்
சாக்கடைகள் அள்ளித் தக்கார் நகும்படியாய்
வீதியிலே வீசல் வெட்கம்அதை விட்டிடுக!



# பாலையும் புதுச் சோலைகளாகிட!

மாசு நீங்கிட மன்னவர் நெஞ்செலாம்
　　மாண்பு சேர்ந்திட வந்தவர் பாவலர்!
காசி னுக்குநம் காவியப் பண்புகள்
　　கட்டி விற்றிடும் கேவலம் எண்ணிலம்!
தூசெ னும்படி தப்பி விலக்குவம்
　　தூய்மை யற்றவர் நட்பினை! ஆதலின்
ஈச னேபுகும் நெஞ்ம னத் திண்ணையில்
　　ஈன்று செல்குவன் இன்ப நறுங்கவி!

முத்து வெண்ணகை மோகனக் கன்னியர்!
　　மொட்ட விழ்ந்து சிரித்திடும் பூக்குலம்!
தத்தி ஆடிடும் தண்ணியல் தோகைகள்!
　　தங்க வான்மணித் தண்ணொளி வெண்ணிலா!
சித்த மள்ளிடும் தீங்குரற் புள்ளினம்!
　　தென்றல் அன்ன எழில்பல சித்திர
வித்தை காட்டிடும் வந்துவந் தெங்களின்
　　மென்ன றுஞ்சுவை மீந்திடும் பாக்களில்!

மின்ன லைவிற கென்று நினைந்திடும்
　　வெள்ளி யைமல ரென்று புனைந்திடும்
கன்ன லைப்புது நீரென மாந்திடும்
　　கற்பெ னுங்குணச் சாற்றினில் நீந்திடும்
இன்ன லைச்சிறு தூசென வென்றிடும்
　　ஏழ்மையை நிறம் எவ்விதம் என்றிடும்
நன்னிலை தமிழ் நாடு பொருந்திடல்
　　நாடு கின்றவர் நந்தமிழ்ப் பாவலர்!

பண்பு பாடுவம்! பண்பினுள் ஒன்றெனப்
பாடு பட்டிடும் பண்ணையும் வாழ்த்துவம்!
மண்பு குத்திநல் மானுடப் பண்புகள்
மக்க ளுக்கென் றிலக்கியம் செய்திட்டோம்!
எண்மி குந்தொழில் மக்களை ஏய்த்திடும்
எத்த ரின்மனம் பண்படப் பாடுவம்!
கண்த ரும்அறி வீகுவம் எங்கணும்!
கள்ள ரென்பவர் கைத்திறம் வெல்குவம்!

பட்டு நல்கிடும் பூச்சியைக் கேவலப்
பட்சி யாங்கழு குண்ண விடுக்கிலம்!
முட்டை பொன்னினில் இட்டிடும் வாத்தினை
மூட ரின்கரம் கொல்ல விடுக்கிலம்!
விட்டி டோர்புனு கீந்திடும் பூனையை
வேட்டை நாய்கொலை யாக்கி மகிழ்வதை:
மட்டி லாஅறி வுக்குவை மிக்கிடும்
மங்க ளத்தமிழ் வாழ உழைக்குவம்!

வேலை இன்மை விளம்பி எழுங்குரல்
வீற ழிந்து விழும்படி பாடுவம்!
ஆல யங்களில் காலையும் மாலையும்
ஆர்த்த திர்ந்திடும் சங்கொலி போலவே
ஆலை எந்திர கூடங்க ளாயிரம்
ஆழ்ந்த திர்ந்திடச் சங்கனில் பாடுவம்!
பாலை யும்புதுச் சோலைக ளாகிடப்
பாடு கின்ற பரம்பரை அல்லவா!

ஈங்கெ மாலைகள் ஈந்த நறும்பொருள்
ஏற்றி டும்படி நீந்திவந் தெங்களின்
காங்க யன்துறைப் பட்டின வாயிலில்
காத்து நின்றிடும் கப்பல்க ளாயிரம்!

வீங்கு நம்தமிழ் வெல்கலை கண்டிட
　　வேண்டி இங்குறும் வேற்றவர் ஆயிரம்!
ஓங்கு தெந்தமிழ்த் தொல்குடி இன்றெனும்
　　உன்ன தப்புகழ் மீண்டிடப் பாடுவம்!

சிங்கமோ விறல் யானைக ளோஎனும்
　　திண்டிறல் மறக் காளையர்! மின்னுடல்
தங்கமோ மலர்ச் சப்பற மோஎனும்
　　தாரகை விழிக் கன்னியர்! வாழ்வெலாம்
கொங்கு தேர்ந்திடும் வண்டென நல்லவை
　　கொண்டு கூறிடும் கூன்வெலும் முப்பினர்!
திங்களோ எனும் சுந்தரப் பிள்ளைகள்!
　　சேர்ந்து மின்னிட நம்மினம் பாடுவம்!

ஏடெலாம் கவி இன்பம் முழங்கிட,
　　எண்ணெலாம் தமிழ் வீரம் அளாந்திட
நாடெலாம் நமை நாடி மகிழ்ந்திட
　　நல்லவர் தொகை இங்கு நிரம்பிட
வீடெலாம் தமிழ் நீதி விளங்கிட
　　வீறெலாம் தமிழ் வீரம் இயம்பிட
பாடெலாம் பனி யாகி மறைந்திட
　　பாடுவோம்! புது வாழ்வு படைக்குவம்!

ஆடலுக் கெழில் ஈந்திடும் பாட்டுகள்!
　　அறிவி னுக்கொளி ஈந்திடும் பாட்டுகள்!
கூடலுக் குணர் வீந்திடும் பாட்டுகள்!
　　கொண்ட லுக்குயிர் ஈந்திடும் பாட்டுகள்!
வாடலுக் கழி வீந்திடும் பாட்டுகள்!
　　வள்ள லுக்குயர் வீந்திடும் பாட்டுகள்!
ஏடலுக்க வரைந்து நிலந் தொறும்
　　ஏற்க இன்ப மடைந்திடப் பாடுவம்!

# சிறுமை கண்டு பொங்குவோம்!

சிறுமை கண்டு பொங்கிடுவோம் என்றவுருச்
சிறுமை கொண்ட கவிதையொன்று செப்புகிறேன்:
உருவிற் சிறுமை உண்டென்று பழிக்காதீர்!
கருவின் பெருமை கருதிச் சுவைத்திடுக!

பொங்கி எழுந்து பொசுக்கி ஒழிக்கவென
இங்கு மலியுஞ் சிறுமைகளோ ஏராளம்!
அதற்குள் கொடிதாய் அமைந்து மிகவிரைவில்
ஒதுக்கி ஒடுக்க வேண்டியன ஓர்மூன்றே!

அறிவிற் சிறுமை, அடுத்துப் பெரியோர்கள் —
சிறியோர் என்னுஞ் சிறுமை நிறையென்னும்
ஒழுக்கந் தவறும் ஊத்தை நெறிச்சிறுமை!

இழுக்காய், அழுக்காய் இயலும்இச் சிறுமைகளை
ஒழிக்கும் வழிகள் ஒவ்வொன் றுரைக்கின்றேன்:
செழித்த அறிவுச் சிந்தையுளோர் உலகெங்கும்
பொங்கி எழுந்து, புரையகன்ற நோக்குமுடன்,
எங்கும் அறிவிற் சிறுமை எரித்திடுவோம்!

வலுத்தோர் மெலிந்தோரை மதிக்காச் சிறுமையினை
நலிப்போம் தெளிந்த நல்லுரைகள் சட்டத்தால்!
ஒழுக்கச் சிறுமை ஒன்றைப் பொறுத்தவரை
ஒழித்துக் கட்டும் பணியை விழிப்பாக
நம்முள் நாமே நடத்திடுவோம்! ஒழுக்கத்தில்
நம்மை நாமே திருத்திடுவோம்! நலமுள்ள
முறைமை இதுவே! முட்டாள் தனமாக
பிறரின் பிழையைத் திருத்தப் புகுவதெலாம்
பிழைகள் மலிக்கும் பெரும்பிழையாய் ஆகிவிடும்!

வழிகள் தம்மை மறுவிதமாய்ச் சொல்வதெனில்
அறிவிற் சிறுமையினை ஆரிடமும் நீக்கிடலாம்!
சிறியர் பெரியர் செப்புஞ் சிறுமையினை
சிறியர் தவிர்ந்த திமிரர்கண் தீர்த்திடுவோம்!

புனித நெறியிற் பொய்யைப் பொறுத்தவரை
தனிமனிதன் தன்னைத் தானே திருத்தற்குத்
திட்ட மியற்றிச் சிறிதும் தவறுமல்
கட்டுப்பட் டொழுகல் கடன்!



# யாழ்நூல் முனிவன்!

யாழ்நூல் நமக்களித்த அன்ற தமிழ்முனிவா!
வாழ்நூல் படைத்தாய்! வழுத்துகிறோம்! உன்னரிய
தொண்டின் புகழே உன்பெயரைத் தூக்கியதால்
தொண்டைப் புகழ்ந்தே சொல்லிடுவேன் உன்பெயரை!

பூசைக்கோர் ஆரியமும் புதுமைசெயும் விஞ்ஞானம்
பேசற்கோர் ஆங்கிலமும் பிறங்கும் இசைமாரி
வீசற்கோ ஓர்தெலுங்கும் வேறும் பிறஇடரும்
நாசத் தினவெடுத்து நம்மொழியைத் திண்ணையிலே
பார்க்கும் விழிதிறவாப் பண்டிதர்காள்! மானவரே!
யார்க்கும் இனிமை யாக்கும் தமிழணங்கு
மைந்தர் நடுவில் மகிமைபெற வழியில்லை!
எந்த இனத்தார் ஏற்றம் தருவாரோ?
தெலுங்கு மொழிப்பாட்டுத் தித்திப்பில் மகிழாமல்
குலுங்கு மெழிற்கோலக் குமரித் தமிழினிலே
கீர்த்தனங்கள் செய்வீர்! கிளர்ந்தே இசைவல்லார்
ஆர்த்தரங்கு தோறும் அருந்தமிழைப் பாடிடுவர்!

விஞ்ஞான மென்னும் விரிந்தஅறி வியல்நூல்கள்
மெய்ஞ்ஞான மென்னும் வீட்டின்ப நெறிநூல்கள்
தென்னர் திருமொழியில் தெவிட்டாத செம்மொழியில்
தன்னந் தனிச்சுவையார் தண்டமிழில் தந்திடுக!
சொல்வளத்தில் யார்க்கும் தோலாத தூவளத்தில்
தொல்வழக்கில் இன்று தொடங்கும் புதுவழக்கில்
மண்டிக் கிடக்கும் மதுமொழிக்கா சொற்பஞ்சம்?
கண்டிடுங்கள் கோடி புதுமைச் சலைச்சொற்கள்!

பொட்டா சியமென்று பொசுபறசு என்றுதமிழ்
ஒட்டாத சொல்லை ஒட்டல் தடுத்திடுவீர்!
வல்லார் நீவிர்! வழியுண் டிதுசெய்வீர்!
இல்லை எனிலோ ஏனிந்தப் பட்டமெலாம்?

அண்டிக் கெடுத்த அன்னியரால் அன்றழிந்த
பண்டைத் தமிழின் பலகலைகள் மறுமலர்ச்சி
பெற்றுச் செழித்துப் பீடுற்ற வாழ்வுறவே
முற்றும் முயன்ற மறைமலையார் தொண்டிற்குத்
தந்த பரிசாய்த் தமிழர்தம் முன்னுளைச்
சொந்த இசையைத் துலக்கவெனக் கையாண்ட
யாழின் இனங்கள் யாவருமே பாராட்டிச்
சூழும் வகையிற் சொன்னவிந்தப் பண்டிதனை
எண்ணும் கடமைக் கிணையாக இச்செயல்கள்
பண்ணத் துணிந்து பாய்விட் டெழும்புங்கள்!

சைவ மரபில் தழைத்தோங்கி வந்ததமிழ்
உய்வைத் தழுவ உழைத்துள்ளார் பின்னுளில்
சமணம் பௌத்தம் வைணவத்தைச் சார்ந்தோரும்!
பாவழகுக் காரிகையும் பாடல்நா லடியாரும்
சீவகசிந் தாமணியும் சீரியல்பு நன்னூலும்
மாறன் அலங்காரம் மற்றும் பலநூலும்
கூறியவர் சமண நெறிக்கோட்டப் புலவோரே!

கம்பப் பெருப்புலவன் கவிவில்லி புத்தூரான்
நம்பற் கருஞ்செய்கை நாட்டிட்ட பன்னிருநல்
லாழ்வார்கள் என்போர் வைணவத்தின் ஆற்றேரே!
வேதாந்தப் போக்கை மேற்கொண்டு மிவர்போல
நீதாங்கிச செய்தாய் நிலைக்குந் தமிழ்ப்பணிகள்!

வாய்வயிற்றைக் கட்டி மக்கள் பசிதாங்கிப்
போய்வழங்கி வந்த பொருளாம் பிடியரிசி
தன்முயற்சித் தாழாமை தந்த தளர்வில்லாப்
பொன்பொருள்கள் சேர்த்துப் பொன்று முயற்சியினல்
பள்ளிபல கட்டிப் பண்டைத் தமிழ்நூல்கள்
உள்ளபடி அச்சில் உயர்வாய்ப் பதிப்பித்துத்
தொண்டு புரிந்து வாழ்வெல்லாம் துறவைமேற்
கொண்டிருந்த நாவலனர் கொள்கை வழிநின்று
கல்லூரி கட்குக் காலாஞய்! தமிழ்த்தொண்டு
வல்லோய்! நயந்தேன் வாழ்த்தித் தொழுகின்றேன்.

ஆங்கிலத்தைச் சும்மா அரைகுறையாய்க் கற்றெண்ணம்
வீங்கித் திரியும் இந்நாட்டு வீரர்கள்
தென்பால் மொழியின் திறனறியார்! மேல்நாட்டு
'டின்'பால் மொழியில் திளைத்திடுவர்! தொப்பியினல்
முகடு கிழிந்தவராய் முக்காடு போட்டிடுவர்
பகிடி விடுவர் பசுந்தமிழை! அந்நியரின்
ஆடை அணிகள் அணிவர்அவ் வெட்கத்தை
மூடி மறைக்கும் முயல்வில் அதைமொழிவர்
வீரிந்த மனப்பான்மை விதமென்று! தன்மானம்
உரிந்த மனப்பான்மை உண்மையிலே இதுவன்றோ?
விழித்து மரபை மேற்கொள்ளா விட்டாலோ
அழிப்போர் ஆவர் அருமைத் தமிழ்மொழியை
பழித்தல் அன்றிப் படுபாவிக் கூட்டமெனக்
கழிப்புக் குரியவராய்க் கணிக்கப் படுவார்கள்.

பொன்னய் மணியாய்ப் புதுப்புனலாய்ச் சிந்தனைகள்
தன்னற் கிளம்பித் தன்மானம் தந்துதவக்
காலாசி என்றன் காதல் தமிழனை
மேலாக வைக்கும் விபுலானந் தர்நினைவு
என்றென்றும் ஆள்க எனை!

# போனாற் போகட்டும்!

போனாற் போகட்டும் புன்சுவைப்பு கல்வியிலே
நானோ தயங்கேன் நயந்தறிவேன் என்பவரை,
போனாற் போகட்டும் பொருள்யாவுங் கொடையினிலே
தீனால் இன்மை தீர்த்திடுவேன் என்பவரை
போனாற் போகட்டும் பொழுதெல்லாம் தொழுகையிலே
வானோர் இறையை வந்திப்பேன் என்பவரை
போனாற் போகட்டும் புலனாற்றல் தீவெறியை
ஏனென்றும் கேட்கேன் இகழ்ந்திடுவேன் என்பவரை
போனாற் போகட்டும் பொருளுள்ளோர் கொண்டாட்டம்.
யானோ யார்க்கும் அன்புசெய்வேன் என்பவரை
போனாற் போகட்டும் பொருந்துமுயிர் துளிமானம்
ஆனாலும் போக அனுமதியேன் என்பவரை
போனாற் போகட்டும் பொய்மையுயிர் கற்பென்னும்
வானோர் திருவை மண்ணுக்கேன் என்பவரை
பொன்னன்ன வாழ்வு போனாலும் நீதியினை
முன்னின்று காப்பேன் முனிவிடையும் என்பவரை
என்னென்ன செல்வம் எனைவிட்டுப் போனாலும்
பின்னில்லேன் செய்வேன் பெறுங்கடமை என்பவரை
என்னூரில் அன்றி எவ்வூரிற் கண்டாலும்
இந்நாட்டி லன்றி எந்நாட்டிற் கண்டாலும்
மண்ணுலகில் அன்றி மற்றுலகில் கண்டாலும்
உண்ணெகிழ்ந்து கும்பிடுவேன் ஓர்ந்து!

# வேடிக்கைக் கனவு!

சாமம் வரைக்கும்
தமிழோ டிருந்துவிட்டு விடியச் சோம்பல்
நாமம் பலவும்
நம் பெற்றோர் நயக்கீய எழுவோம்! நெஞ்சில்
ஊமைப் புண்கள்
ஓரா யிரமுள்ளோம்! இங்கே வந்து
சேம முறற்குச்
செப்பிடிலோ நல்லவழி, சிரிப்பா ரன்றோ?

இப்படியே எண்ணி
இருக்கையிலே ஓரெண்ணம் நினைவில் தோன்றும்
எப்படியும் பாடி
என்னபயன்? நம்முன்னோர் ஆக்கித் தந்த
ஒப்பரிய நூல்கள்
ஒழித்தனவா உலகினிலே பிழையை எல்லாம்
அப்படியே குற்றம்
அகிலத்தை வாட்டுகி'தே' ஏதும் என்ன?

சிந்தித்தேன் இரவெல்லாம்!
தெரியவில்லைக் காரணங்கள்: அதற்குள் தூக்கம்
முந்திட்ட தென்புத்தி
முனைவின்றி அடங்கிற்று! தூக்கந் தன்னில்
வந்துற்ற கனவொன்றில்
மனிதவுருக் கொண்டொருகால் இறைவன் இந்த
விந்தைக்குக் காலான
விளையாட்டுக் கதைகண்டேன்! விரிப்பக் கேளீர்!

ஊழ்வினைக்கு மகளாகி
ஊழ்வினைக்குத் தாயாகும் செயல்கள் மண்ணில்
யாழ்நகரில் 'கார்'கள் போல்
யாங்கணுமே பெருகுவதைக் கண்டே விண்ணில்
வாழ்சிவனுர் மனமிரங்கி
மானுடர்கள் துயரங்கள் நலிவை நீக்கித்
தாழ்வகற்ற எண்ணுகிருர்!
தாங்குகிருர் மனிதஉரு தரையில் வந்தார்!

கள்ளருந்தல் என்பதொரு
கடுந்தீமைச் செயல்தன்னை முதலில் நீக்க
உள்ளுகிருர் சிவன்! அந்த
உச்சிவெயில் நேரத்தில் பற்றை எங்கும்
முள்ளிருக்கும் காவோலை
முறுமுறுக்கும் பனஞ்சோலை ஒன்றைக் கண்டார்!
உள்ளிருக்கும் கட்குடியர்
ஊத்தைமொழி கேட்டங்கு நடந்தார்! அங்கே

தம்முடுப்பு முற்றும்
தரையில் கிடக்கையிலும் தோழன் சால்வை
அம்மம்ம என்றெடுத்தும்
அளிக்கின்ற வெறியாளர்! நாளும் பீடித்
தம்மடித்தால் நல்லறிவு
தழைத்துவரும்! குண்டூசி கற்ருல் உய்வு
சம்பவிக்கும் என்பனபோல்
தத்துவங்கள் கள்ளடித்துப் பேசும் ஞானி!

மைந்தன் அருந்தந்தை
மாமன்மச் சானென்னும் "மடைமை மிக்க"
எந்த ஒருவரம்பும்
இங்கில்லை; எல்லோரும் ஒன்றே! என்னும்
அந்த நிலைதன்னில்
ஆடுகிறார்! ஓராளை அழைத்தார் ஈசன்!
"தந்திடவா ஒருபோத்தல்
தம்பிக்கும்?" என்றபடி அருகில் வந்தான்!

மிருகநிலை விடுவிக்க
வேண்டுதல்கள் பலபுரிந்தே மனித ரானீர்!
பருகிவெறும் பழங்களைப்
பழையபடி மிருகமென மாறல் நன்றோ?
உருகிமிகச் சிவன்அவனை
உசவுகையில் அவர்பார்க்க ஒருவன் பாளை
அரியுமொரு கத்தியுடன்
அவர்மீது பாய்கின்றான்! அசந்தே போனார்

அச்சத்தில் சிவனுக்கே
அறிவெல்லாம் கெட்டுவிட்டுத் தமது வன்மை
உச்சத்தை எல்லாம்
உணராமல் அவர்திரும்பி ஓடு கின்றார்.
மிச்சமெனும் வேகம்!
வெகுதூரம் ஓடியபின் திரும்பிப் பார்த்தார்!
கொச்சைமொழி பேசிக்
குடிகாரன் மண்மீது புரளக் கண்டார்!

உள்ளனவா கங்கைபிறை?
உதிர்ந்தனவா? என்றுசடை தடவிப் பார்த்தார்!
உள்ளதிர்ந்தார் காணுமல்:
ஒருநொடியுள் உருகினைந்து தேறு கின்ருர்!
கள்வெறியே தானவனைக்
காலிடறி அவருயிரைக் காத்த தென்று
"கள்வெறியே! வாழ்க!"வெனக்
கடவுள்வாய் வாழ்த்தியது! மூச்சும் விட்டார்.

அன்றுசிவன் வாழ்த்தியதால்
அழியாது கள்வெறியும் என்றும் வாழும்!
அன்ெருருஊர்க் கோயிலிலே
ஆடுகொலும் வேள்வியென அறிந்தார் ஈசன்!
சென்றடைந்தத் தீயசெயல்
தடுத்தற்குத் திருவுள்ளங் கொண்டார்! கல்லின்
குன்றுகளும் பிளக்கின்ற
கொடியவெயில்! கோயிலுக்கு நடந்தார் ஓடி!

கோயிலிலே ஆடுகளின்
குருதியெலாம் வழிந்தோட 'ரசிகர்' கூட்டம்
வாயிலிலே ஆடுகளை
வண்டிகளில் துண்டுகளாய் ஏற்றல் கண்டார்!
போயினியேன் முடிந்ததெலாம்!
பொல்லாங்கு தொடர்ந்துவரும் ஆண்டி லேனும்
போயகல மணியத்தைப்
புத்திகொளச் செய்வமென எண்ணிக் கொண்டார்

மேலுக்கோர் ஆடேற்றி
வீட்டிற்கு விரைகிறது மணியம் வண்டி!
தோலுக்கு வருவெனெனச்
சொல்லுகிறான் சோனகனும்! உரிக்க ஆட்டை
ஓலைக்கும் ஆளுக்கும்
ஒழுங்குபண்ணிச் செல்லுகிறான் மணியம்! கொஞ்சம்
காலுக்கு விரைவூட்டிக்
காளைவண்டி பின்தொடர்வர் சிவனார் ஓடி!

குளிர்நிழலும் குளிர்காற்றும்
குழைந்தாடும் ஓர்புளியந் தோப்பில் உள்ளே
தளர்நடையில் மணியத்தின்
தசைவண்டி நுழைகிறது! சாயும் ஒற்றைக்
கிளையினிலே ஆடுதலை
கீழாகத் தொங்கி'றது! சிறுநே ரத்தில்
கிளர்வுதரும் குடலைகளாய்க்
கிடக்கிறது! மணியங்கை எடுக்கும் மூன்றை!

இடம்பார்த்து மணியமிடம்
எண்ணத்தை எடுத்தியம்பச் சிவனார் தம்முள்
படம்போட்டு மணியத்தின்
பாதையிலே தொடர்கின்றார்! அவனோ நீயும்
குடலையெதும் கேட்டற்கா?
கொடுத்தற்கோ இல்லையெனக் கூறிக் கொண்டு
நடந்தேறிப் படிகளிலே
நங்கையிடம் கொடுத்தவற்றைக் குந்திற் சாய்வன்

பண்ணைக்கோ ராள்விட்டுப்
படகினிலே வாங்குவித்த பச்சை மீனை
எண்ணெய்க்குள் இடுவித்தே
இறைச்சியுடன் பொரித்தெடுத்த பொரியல் வீட்டுத்
திண்ணைக்கு வருகிறது!
சிரட்டையொடும் ஒருசோடி கட்போத் தல்கள்
பெண்ணெடுத்து வருகின்றாள்
பெருமானார் அவள்தலையைப் பார்த்தார்! அந்தோ!

ஈரம் கூந்தல்
எங்கேஅது உலர்த்த நேரம் என்று
பாரம் தலையிற்
பயிலப் பழந்துணிகள் புகுத்தி ஒன்றாய்ச்
சேரும் படியாய்த்
திரித்தழகு செய்தஅவள் குடுமி தம்மின்
நீரும் பிறையும்
நிலவுகின்ற சடைமுடியை ஒத்தல் கண்டார்!

தக்கபொழு தென்று
சார்கின்றார் மணியத்தைச் சிவனார்! மெல்லத்
துக்க மிதுவென்று
தொடங்கியறச் சிந்தனைகள் சொல்லப் போனார்
மக்கு மடையா!
முடியாது என்றெழுவன் மணியம்! ஈசன்
மிக்க கொடுமை
எனுமுன்னர் மிருகமவர் மீதிற் பாய்வன்!

பங்கிறைச்சி கிடைக்காத
பதைப்பினிலே அங்குவந்த ஒருவன் பாய்ந்தே
எங்கிறைச்சி எனக்கென்றே
இடைமறிக்க மணியத்தார் முறைத்தார்! அங்கு
தங்களுக்குள் அவ்விருவர்
சண்டையிடச் சிவன்செல்ல நழுவா முன்னம்
செங்குருதிச் சேற்றிடையில்
மணியத்தான் சரிகின்றான்! சிவனார் கண்டு

பட்டொழிந்து போகட்டும்
படுபாவி! கொலைவாழ்க என்றார்! பேருய்
விட்டொதுங்கல் இல்லாமல்
வெங்கொலைகள் என்றென்றும் நாட்டில் வாழும்!
எட்டமறந் திதைவிட்டே
எண்ணுகிறார் குருநிந்தை பற்றி ஈசன்!
சுட்டெரிக்க அதைஎண்ணித்
தோன்றுவர்ஓர் பள்ளியிலே! சட்டாம் பிள்ளை

சட்டைக் கொருபட்டம்
தலையினிலே உச்சியிலே வழுக்கை வீழ்ந்த
மொட்டைக் கொருபட்டம்
முறையின்றி அவர்செல்ல மகளாந் தூய
பெட்டைக் கொருபட்டம்
பெயரிட்டு மகிழ்கின்ற பண்பில் மிக்க
பட்டிக்கும் உதவாத
படிப்பாள மாணவரின் நடுவிற் செல்வார்.

கெட்டசெயல் குருந்தை!
கெஞ்சுகிறேன்! மேம்பாடு வேண்டும் என்கில்
விட்டிடுக! எனபதற்குள்
விளையாட்டு மாணவர்கள் சுற்றிக் கொண்டு
குட்டுகிறார்! கொட்டுகிறார்!
குரங்காட்டம் ஆடுகிறார்! சிவனார் 'ஐயோ
விட்டிடுங்கள் எனைமட்டும்!
வேறொன்றும் விடவேண்டாம்'' என்றார் ஓஉ!

இங்கிருந்தப் பாதகத்தை
இல்லாமற் செயவியலாச் சிவனார் நாட்டில்
கங்குலிலே கள்வரது
கைவரிசை ஓங்கிடுதல் கேள்விப் பட்டார்!
தங்கிஒரு மடந்தனிலே
சாயம்வரை, புறப்பட்டுத் தெருவில் வந்தார்
எங்குமிருள்! சவஅமைதி!
இடையிடையே ஆந்தைகளின் அவலக் கூச்சல்!

தள்ளிஅவர் முன்னாலே
தனியொருவன் வரக்கண்டு மறைந்து நின்றார்
மெள்ளஅந்த ஆள்பக்க
வீட்டினது மதிலேறிக் குதித்துள் ளோடிக்
கள்ளமுடன் அறைபுக்குக்
கதவடைப்பன்! கண்டசிவன் ஓகோ யாரோ
பள்ளிபயில் மாணவகன்
படம்பார்த்துத் திரும்பியுளான்! என்று தேர்ந்தார்.

சிரிக்கின்றார் சிவன்! ஆமாம்
சிலநொடிதான் அதற்குள்ளாய் யாரோ வந்தே
இரைக்கின்ற மூச்சுடனே
இவர்கைக்குள் வைத்தெதையோ ஓடு கின்றான்!
"சரக்"கென்ற சப்பாத்தின்
ஒலிநெருங்கும்! தாவிவந்த பொலிசார் கையில்
இருக்கின்றார் சிவபெருமான்
இப்பொழுது! பொலிஸ்நிலையம் செல்லு கின்றார்!

"களவெடுத்தீர்?" பலனில்லைக்
கதைத்தென்று சிவனும் ஆமா வென்றார்
ளமமென்றள் அழைத்துப்போய்
வைத்தார்கள் சிறையினிலே! சிவனார் யானே
உளம்பொருந்திப் பொய்சொன்னேன்
உள்ளபடி பொய்தேவை தானே என்றார்
அளவெடுக்க முடியாமல்
அன்றுமுதல் உலகமெலாம் பொய்யில் நீந்தும்!

'இப்படியே சிறைக்குள்ளே
இருப்பதெனில் என்கடமை என்ன ஆகும்!
தப்புவதே இங்கிருந்து
தக்கவழி தப்பிஉரு மாறி ஏகல்
எப்படியோ களவன்றோ?
இறைவனெனும் யான்செய்தில் கள்ளம் இங்கே
எப்படியோ மாறுவதும்?'
என்றுரைத்தார்! என்றென்றும் களவும் வாழும்.

தடுமாறி விழிக்கின்றேன்!
தவிக்கின்றேன் சிவனென்னும் தாயோன் பற்றிக்
கெடுமாறு கண்டேனே
கேவலமாய்ச் சனவென்று மனத்துள் ஈசன்
அடமுடா வேதனையேன்
ஆள்ஆளை அடித்துண்ணும் உலகில் நாளை
கடவுள்என் கதையும்நீ
கண்டகனுப் போல்முடிதல் கூடும் என்றார்!

# புத்தாண்டு வரக் கூவு!

சித்திரத்துக் கோலஞ் சிதறிக் கொலுவிருக்க
முத்திரைகள் போட முழுவசந்தம் — சித்திரையை
ஏற்றுச் சுவைப்பா இளமைக் குயிலேநீ
போற்றி இசைப்பாய் புகழ்ந்து!

உள்ளுருக்குங் காதல் உதவுங் கிளிமொழியார் [கம்
கள்ளிருக்குங் கொவ்வைக் கனியிதழ்போல — முள்முருக்
பூக்கள் சொரியப் புதுவசந்தக் கனனிக்குப்
பாக்கள் நயஞ்சேரப் பாடு!

சாயாத கொங்கைத் தயங்குமிள நீர்க்குலைகள்
காயாகக் காய்க்கும் கமழ்பாளை — வாயாய்
வெடித்துச் சிரித்து விரிதென்னந் தோப்பில்
அடுத்துக் குளிர்ப்பா அறை!

தண்டாடப் பூத்துச் சதிராடுந் தாமரையில்
வண்டாடிப் பாடும் வகையெல்லாம் — செண்டாடும்
பூங்கிளையிற் குந்திப் புதுமை எனநோக்கி
மாங்குயிலே கூவாய் மகிழ்ந்து!

முத்திரைச்செம் பாம்பு முறுகிப் புறங்கிடப்ப
மத்திரையும் ஆயர் மனைகளிலே — நித்திரைக்குப்
பாயெடுத்து முற்றம் பலரோடுங் கங்குல்நாள்
வாயெடுத்துக் கூவி மகிழ்.

கொப்போடு முஞ்சல் குலுங்க உதைந்தாடிக்
கப்பல் கதலி கமுகென்னும் — ஒப்பரிய
பாட்டும் இசைப்பர் பரவுஞ் சுவைதன்னைக்
கேட்டுப்பா பாடு கிளர்ந்து!

இளநீர்க் குலையருந்த இன்றமிழைக் கேட்க
வளநீர்ச் சுனையில் வழங்க—குளிர்நீர்கள்
மாந்திப் பருக மனங்கொள் சுடுவேனில்
மாந்தர்க்குன் பாடல் மகிழ்[illegible]

இன்னொலிகள் சேர்ந்தே இயன்ற தமிழ்மொழியில்
மின்னொலிகள் சேர்ந்து விளையாடிப்—பன்னலமும்
பூத்துக் குலுங்கிப் பொலியும் புதுப்பாக்கள்
யாத்தல் சிறக்க அறை!

குன்றின் சரிவினிமை குதித்தோடும் நீரறியும்!
தென்றல் தொடுஞ்சுவையைத் தீபட்ட புண்ணறியும்
கொப்பின் தழுவினிமை கொஞ்சுமலர்க் கொடியறியும்!
உப்பின் தனிமுதன்மை ஊரார் உணவறியும்!
மோரின் குளிர்ச்சுவையை மூளுநங் குடல்மொழியும்!
வேரின் உயிர்ப்பெருமை விண்டோய் மரமறியும்!
தேரோடும் வீதி தேரின் பொலிவறியும்!
காராடும் காடு காரின் எழிலறியும்!
தங்கத் தமிழினிமை தனையிவ் விரியுலகம்
எங்கும் அறியும்! எல்லாரும் போற்றுகிறார்!
ஏடாளும் மங்கை இன்பத் தமிழ்—அனைத்து
வீடாளு கின்றாள் மேதினியின் தலைமொழியாய்!
இத்தனையும் ஏதும் வெறிச்செயலா லன்றுலகம்
பித்தாகும் பண்பு பேரழகுச் சுவையாலே!
என்றெடுத்துப் பேசும் எதிர்காலந் தோற்றுவிக்க
இன்றெடுத்துப் பாதை எழிலாண்டே நல்கென்று
செயலே அறியாச் செல்வத் தமிழ்நினைந்து
குயிலேநீ கூவாய் குழைந்து!

புற்றினுக்குள் வாழும் புதுமையெதுஞ் செய்யாத
சிற்றெறும்பின் சின்ன ஊக்கம் புகழும்யாம்
மண்ணிற் றெழில்கள் மலியப் புரிகின்றோம்!
விண்ணிற் பறந்து விளங்கும் புதுமைபல
பண்ணித் துலங்கும் பணிகோடி செய்கின்றோம்!
கேட்டுப் பயின்றே பேசுங் கிளியினத்தைப்
பாட்டில் விதந்து பாராட்டும் மாந்தர்நாம
சிந்தை முளைக்குஞ் சிந்தனைகள் கோடியினை
உந்து முணர்வின் ஓட்டத்திற் செப்புகின்றோம்!
வானம் பாடி வண்டினங்கள் மீன்வர்க்கம்
ஞானம் உணர்வு நயப்பின்றி ஓரிசையே
தோற்றிப் பாடுஞ் சுவைமுட்டாப் பாட்டுகளை
ஏற்றிப் புகழ்ந்திங் கேதேதோ சொல்லும்யாம்
யாழுங் குழலும் ஆர்க்கும் கருவிகளுஞ்
சூழுஞ் சுகிப்பில் சுவைமின்னுந் துள்ளிசைகள்
தாளம ஏராளம் தழுவிப் படிக்கின்றோம்!

மிக்க உணவின் வேளையிலே தங்குலத்தைப்
பக்க மழைத்துப் பகிர்ந்துண்ணுங் காக்கைகளை
உயரப் புகழ்வின் உப்பரிகை ஏற்றும்நாம்
அயரப் பசிக்கும் அல்லலிலே யாரேனும்
நசியுந் தொனியில் நங்கதவைத் தட்டுகையில்
கசியும் நெஞ்சின் கனிவோ டுணவளிப்போம்!
தந்தை யிறைவன தரணியுடன் உயிர்மலியத்
தந்த முனைவன் தலைவன் தனிமுதல்வன்
அடித்தா மரையில் அடைந்தோர் சுகம்பற்றிப்
படிப்போம்! நடிப்போம்! பறைவோம்! அவைதனிலே
உவப்போ டுரைப்போம்! ஆனல்பல் லாயிரவர்
சிவப்பே றடைந்த செய்திபல தோற்றினமா?

மறையின் நெறியை மண்ணில் மலித்தின்ப
இறைவன் அருளை இம்மண்ணில நாட்டினமா?

இந்தக் குறைக்கும் இழவோலை செய்விக்க
வந்த புதிய ஆண்டை வரங்கேட்டு
சலிக்குஞ் சான்றோர் தாங்குகின்ற வேட்கைகளை
ஒலிக்குங் குரலால் உரை!

கோயிற் கொடியேற்றம் கூட்டு வழிபாடு!
தாயிற் சிறந்த தண்ணிறைக்கு நீராட்டு!
தொழுகை! நோன்பு! துதிபாடும் ஊர்வலங்கள்!
விழுகை! அழுகை — வீறுற்ற மெய்யன்பால்!
இத்தகைய கூற்றோ ஏராளம் இன்றிருந்து
பத்திரிகை எங்கும் பக்கம் நிறைக்கட்டும்!

தென்னை பனையிற் சீவுகின்ற கட்கடைகள்
வன்ன மலர்க்கடையாம் கட்கடையாய் மாறட்டும்.
இறைச்சிக் கடைகள் ஈயெறும்புஞ் செல்லாமல்
வெறிச்சென் றிருந்து விட்டொழிந்து போகட்டும்!
மீனுக்குத் தூண்டில் வீசல்போய் விண்தங்கும்
மீனுக்குள் வாழும் மேம்பாடு மலரட்டும்!

காரேறிப் பூத்துக் கனநீர் பொழிந்தேரி
நீரேறிப் பூத்து நின்றாட நெற்கதிர்கள்
போரேறிப் பூத்துப் பொலியட்டும்! திருமங்கை
தேரேறிப் பூத்துச் செழும்பவனி கொள்ளட்டும்
கூரேறிப் பூத்த கொங்கையரின் கற்போங்கி
வேரோடிப் பூத்து விளங்கட்டும் நல்லறங்கள்!

இப்படியே உன்றன் எழில்வாய் திறந்துவரஞ்
செப்படியே அம்மா! சிறந்துவரும் புத்தாண்டே!
என்றென் றியம்பி இன்பத் தமிழ்க்குயிலே
நின்றிங்கு கூவாய் நினைந்து!

# உண்டோ இணை?

முந்தை இறைவன் முழுஉலகின் தந்தையெனும்
அந்த முதல்வன் அருளடியை - சிந்தைபொழுக்
கும்பிட்டா லன்றிக் குழைந்தே அவன்பெற்றி
நம்பிட்டா லன்றி நவில்கல்வி - வம்புக்கே
என்றிங் கிகழ்ந்து வணங்காத் தலைகளையும்
நன்கு நகைத்திருக்க வள்ளுவனார் - இன்றுள்ள
பட்டப் படிப்பால் பணிவுள்ளம் கெட்டுள்ள
மொட்டைக் குறைஅறிவு மூர்க்கரெனில் - கட்டி
உரைக்கின்றார் ஏதோ உணரா திறையை
நரைக்கின்ற வாதங்கள் நாட்டி! - மரிக்கின்ற
நேரத்தி லேனும் நெறிகண்டே ஈசற்குக்
கோரிக்கை விட்டுக் குலையாத் - துணிந்தோரைக்
காண முடியாது! காணீர்! இவர்போக்கு
நாணி மறைந்திடுதல் நன்கறிந்து - பேணீர்
இறைவற் பணியென்றே எச்சரிக்கும் நீதிக்
குறளுக் கிணையுண்டோ கூறு!

ஊருணிபோல் மக்கட் குதவுகின்ற தொண்டுகளைச்
சீரறிந்து செய்யத் தலைப்பட்டால் - நேருகின்ற
இன்னல்கள் என்ன இடரென்ன அப்பப்பா
சின்ன மனிதர் செயலாமோ - சின்னவர்கள்
காப்பிழந்த நெஞ்சக் கயவர்கள் மூட்டுகின்ற [தோர்
தீப்பொறிபோல் 'தொண்டுகளோ' சிந்தையிலே - மூப்படைந்
காறி உமிழும் கயமைகளே செய்திடலாம்!
நாறுகின்ற சேறே நயந்திடலாம்! - கூற
செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கிலார் என்றே - நயக்கும்
அறங்கிடந்த நெஞ்சின் அருந்தமிழர் செல்வக்
குறளுக் கிணையுண்டோ கூறு.

இன்னொருவர் பற்றி இழுக்காய்ப் பலபேசி
அன்னவரின் ஆக்கத் தகம்வெந்து - பின்னவரை
வஞ்சிக்க எண்ணி மனதுள் நடுநடுங்கிக்
கிஞ்சித்தும் தேற்றம் கிடைக்காமல் - தஞ்சித்தம்
தீய உணர்வால் சிறைபட்டுத் தீபட்டுக்
காயுஞ் சுடுகான் கழுகாகி - நாவற்றி
நெஞ்சங் கருகி நினைவெல்லா மேகருகிப்
பஞ்சப் புலன்கள் பயன்கருகித் - துஞ்சவிடா
அன்பென்னும் தண்ணீர் அலைகொள்ளா நெஞ்சத்தில்
துன்பங்கள் முட்டித் துதைந்தாடும் - என்பதனை
அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்றென்றே - அன்பற்
றருகுமிருள் நெஞ்சர் அழிவாழ்வைக் கூறும்
குறளுக் கிணையுண்டோ கூறு.

தட்டிப் பறித்துண்டும் தன்மானம் விற்றும்கண்
கட்டிப் பறித்தும் களவாடி - வெட்டிப்
புதைத்தும் திரட்டும் பொருளெல்லா மீற்றில்
எதற்கும் உதவா ததோடு - மதிப்புப்
படிப்பும் பயனகப் பாழடைய வைத்துக்
கொரிக்கும் எதையும் கொடிதாய் - அடுக்கெட்டு
வீடொன்று கட்டி விரும்பிக் குடிபுகுந்தால்
காடென்னும் வண்ணம் கனலாகும் - கேடென்ற
ஒன்றே உமிழும் உலையாகும் இச்செல்வம்
நன்றாம் பொருளோ நலமீனும் - என்றதையே
வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயனென்றார்.

சீதளத்தைச் சிந்திச் சிலுசிலுப்பைச் சிந்தையிலே
மோதவிட்டு மோகக் கிளர்வூட்டும் - காதலெனும்
நல்லுணர்வைச் சொல்லி நயந்திடவும் தீம்பனுவல்
வல்லவனும் வள்ளல் மறக்கவில்லை - எல்லாம்
கறையானுய்ச் செத்தபினும் கவ்வுமுடல் நீங்கா
நிறையார் நெறியாருக் கன்றி - குறியின்றி
மாடாடு போல்தம் மனம்போன போக்கெல்லாம்
ஈடாடும் தீய இளைஞர்க்கோ - ஏடேந்திப்
பள்ளி நடக்கின்ற பாங்கினிலே காளையுளம்
கிள்ளி நடந்து கிளர்வூட்டி - மெள்ளத்தான
நாடாமல் விட்டு நலியஅவன் கைவிட்டங்
கோடேந்த வைத்த ஒருத்திக்கோ - பீடாரும்
வள்ளுவனுர் பாக்களினை வாய்மலர்ந்து வைக்கவில்லை
கொள்ளை அறங்கள் கொழிக்கின்ற - உள்ளும்
திறஞ்சொல்லிச் சந்தி தெருவெல்லாம் வாழும்
குறளுக் கிணையுண்டோ கூறு!



# பட்டாங்கில் உள்ளபடி

மதுரைத் தமிழே வாய்தே னூறும்
மதுரத் தீந்தமிழே - தென்
குமரித் தமிழே குலவச் சொல்லுங்
குமரித் தேன்தமிழே - இப்
பஞ்சப் பயலின் பாடல் நடுவும்
கொஞ்சக் கிளர்வேனும் - நீ
காணல் வேண்டும் கன்னல் மொழியே
வாணிக் குறுதுணை வீ!

ஈழச் சிறந்த எழுத்தாளச் சந்ததிகள்
வாழப் பிறந்து வளரும் 'கலைச்செல்வி'!
சோக்கடித்துச் சுற்றுந் துடுக்கடக்கிப் பண்பினைச்
சாக்கடைக்குள் வீழ்ந்து தாழாமற் காத்துய்யும்
நோக்கெடுக்கப் பண்ணி நுண்ணறிவுத் தேன்கவிதைப்
பூக்கடைக்குப் போகும் வழிகாட்டி வைத்தாயே!

நாற்றெடுத்து நட்டு நலஞ்செய்த உன்னருளால்
நேற்றெடுத்த காலால் நிறையடிகள் வைக்கின்றேன்!
காணிக்கை உன்றன் கால்மலருக் கென்கவிதை
பேணிக்கை யாற்கவிஞர்ப் பேண!

சூல்கொண்ட மேகம் துளிகொண்டு மழையாகிப்
பால்கொண்ட நெல்லின் மணியாகிப் பாருழவர்
கூழ்என்று மாறிக் குறைநீக்கி மகிழ்வோடு
வாழ்என்று பாரின் வழித்தோழன் ஆவதுபோல்
நிறைகண்டு போற்றிக குறைகண்டு வேகும்நம்
வெறிகொண்ட நெஞ்சம் வீறுற்ற பாட்டாகி
எட்டிற் பதிந்தும் இசைத்தட்டில் வாய்பெற்றும்
கூட்டங் களிலே குந்துசந்தி லேமுழங்கி

குறிதந்து மாந்தர் குலத்திற் கொளியூட்டி
நெறிதந்து வாழ்வின் நிதியாகுந் தன்மையது!

கம்பனிலும் மேலாங் கவிமன்னன் யானென்று
வம்பினுக்குள் மாட்டும் வாய்க்கொழுப்புக் கொள்ளாமல்
காய்தல் உவத்தல் கடுகளவும் இல்லாமல்
ஆய்தல் நிகழ்த்தி அறிந்தவற்றை என்மனத்திற்
பட்டாங்கு பாட்டில் பகர்ந்திடுவேன் தந்துள்ள
பட்டாங்கி லுள்ள படியென்ற தலைப்பினிலே!
அல்லவற்றைத் தள்ளி நல்லவற்றைக் கொண்டிடுக!
இல்லைச் சுணக்கம இனி.

நுண்மைத் திறன்கள் நோற்றுப் பெற்ற
வண்மைக் கலைஞர் வாழ்கின் றதுவும்
கொஞ்சம் எனிலும் குவலய மாந்தர்
நெஞ்சில் மென்மை நிறைகின் றதுவும்
இசையும் ஏனை இன்பக் கலைகளும்
இசைவாய் ஈசன் ஈந்தத னலே!

நாட்டு விலங்குகள் நாமே யன்றிக்
காட்டு விலங்கின் கணமுங் கூட
உள்ளம் நெக்கி உருகி இன்ப
வெள்ளம் மிக்கு விம்மிதம் எய்தும்
இங்கிதக் கலைகள் இங்கிலை யானல்
மந்தக் குணமே சொந்தக் குணமாய்
புனிதம் இல்லாப் போக்கில் மூழ்கி
மனிதக் குலமே வறிதாய் நிற்கும்!

தன்னலம் இல்லாத் தாய்மை அன்பே
இந்நிலங் காக்கும் ஈடிலா மந்திரம்!
வாட்டங் காணில் மைந்தன் ஈரல்
ஆட்டங் கண்டே அதிரும் அன்னை!

வாடுந் தனது வயிற்றை எண்ணிக்
கூடப் பாரா தன்புக் குமரன்
ஆவா வென்றுண் டருந்தல் கண்டு
பூவாய் வதனம் பொலியும் அன்னை!
தூசாய் மற்றோர் துப்பினும் நம்மை
ஆசை அன்பாய் அணைக்கும் அன்னை!
நேற்றே வந்த நேசத் துணைவி
கூற்றை வேதக் கூற்று யேற்றுக்
கூறை அரசுக் குற்றே வலிலே
சூறை நடுவில் துரும்பா யோடித்
துவளில் மைந்தன் துடிக்கும் அன்னை!
இவளே இதற்குக் கடனென் றெண்ணி
மருமக ளோடு மாமிச் சண்டை
புரியும் அன்னை! புலைமகன் ஈடாய்த்
திட்டிடும் போதில் தேம்பிடும் அன்னை!
கொட்டெனும் உடலைக் குருவியாந் தன்னுயிர்
விட்டிடுஞ் சாவின் வேளையும் பிள்ளை
பட்டிடும் பாட்டிற் பரிந்திடும் அன்னை
என்றதோர் தெய்வம் இல்லையேல் உலகம்
இன்றெலாஞ் சாம்பல் இசைந்தமண் மேடாய்ப்
பட்டாங் கியம்பும் படியே
கெட்டொழிந் திருக்கும்! கேடிலார் வாழி!

நிற்கா வாழ்வின் நிலைமை எண்ணி
நற்பே றடைதல் நாடுஞ் சிலர்!
வஞ்சப் புலன்கள் வழியாய் விளையாம
நஞ்சுண் போரை நகைக்குஞ் சிலர்!

தெய்வந் தெள்யாச் சிந்தை யோர்கள்
தெய்வந் தெளியச் செய்யுஞ் சீலா!
ஆகும் ஆன்ம ஞானம் மிக்கோர்
காலந் தோறும் ஞாலந் தனிலே
கால்வைத் திலரேற் கயமை மனிதர்
வால்வைக் காத குறையொன் றேடு
மனம்போல் மதியே வாய்க்கா மிருக
இனம்போல் இன்றுள் மாறி நிற்பர்!
பட்டாங் கியம்பும் படியே தேடித்
தொட்டே தொழுவோந் தூயா ரடிகள்!

காற்றைக் குடித்துக் கட்டுக் சடங்காத
நாற்ற மனத்தை நறிதாக்கி ஞானஒளிக்
கீற்றிற் குளித்த கிளாசிந்தை ஞானியரே
சாற்றி மறைந்த சங்கதிதான் எண்ணில்லா
அழிவில்லா ஆன்மா அழியாத மும்மலங்கள்
ஒழிவில்லா வன்மை ஓரிறைவன் என்பவைகள்
ஆதியிலா மூலப் பொருளென்னும் அருமுண்மை!
ஏதிங்கே அந்த இறையென்று கேட்கின்ற
சடவாதம் பேசுஞ் சப்பாணி அறிவாளர்
முடவாதந் தேர்ந்த முடிவறியாப் பலர்களின்
குடவாதம் பேசிக் குழப்புகிறுர் குட்டையெலாம்!
நடவாதெம் போலி நாடகங்கள் என்றிவரும்
அடங்கி ஒடுங்கி அழுங்குகின்ற வகையிற்பன்
யடங்கி னறிவை மனங்கொண்டு பெற்றிடுவோம்!

சோற்றுக் கதைகள் சொல்லுமின்றை நிலையேவான்
பேற்றுக் கதைகள பேசுகின்ற முன்னையிலும்
மேலென்று தம்மை வியக்குமொரு கும்பலது
சாலங்க ளென்னுஞ் சக்கைகளைத் தள்ளிவிட்டு
நாக்கடங்கி நாவின் தழும்பாற்ற வைப்பதற்கு
நூற்றடங்கள் மூழ்கி நுண்ணறிவைப் பெற்றுயர்ந்து
சிட்டாங்கு சிந்தைச் சிறகாட்டி ஓங்கிடுவோம்
பட்டாங்கி லுள்ள படி!

வாட்டும் பிணிகள் வதைக்கின்ற வயதுணர்ச்சி
ஓட்டைக் கலமாம் உடலின் இயல்பாகும்!
குடிசைக் கூரை குடங்களிலே ஒழுகிடுதல்!
அடிசில் சிலநாள் அரைவயிற்றை நிரப்பிடுதல்!
பள்ளிப் பிள்ளை பாடநூற் கழுதிடுதல்!
இல்லா நிலையில் இல்லாளும் எரிந்துவிழல்
எல்லாம் குடும்ப வாழ்வின் இயல்பாகும்!
தேவை யாவுஞ் செப்பமுறப் பெற்றிடிலே
சாவிற் கூடச் சதிபதிநாம் என்பவரும்

உயிரோ டுலவும் வரைமட்டும் நம்மீதில்
உயிரை வைத்தும் உறவாடும் உறவினரும்
மண்ணில் என்றும் மறையாத பாத்திரங்கள்!
எண்ணி இவையெல்லாம் ஏற்றவர்கள் ஆராய்ந்து
சாட்டையிலே ஆடும் பம்பரமாய்த் தம்மைவிதி
ஆட்டிவைக்க ஆடி அலைக்கழியும் நிலையறிந்தும்
கெட்டாங்கு நிற்குங் கேடறிந்து முயந்திடுவர்
பட்டாங்கி லுள்ள படி!

கன்னிப் பருவக் கதிப்பிற் குதிக்கின்ற
மின்னற் கொடியார் மிடுக்கெல்லாம் முன்னாளில்
அதுங்கிப் பிதுங்கி ஆடைக்குட் பணிவாகப்
பதுங்கிக் கிடந்து பழகியதாற் பெண்ணென்றாற்
தாயென்னும் எண்ணம் தலையெடுக்கும் அல்லாமற்
சீயென்னும் மோசச் சிற்றின்பம் செய்யாவாம்
மிருகப் பணிகள் விளைக்காத அப்பண்பும்
அருகிக் குலைந்திங் கழிந்துவிட இன்றெல்லாம்
கதுவும் விழிகாட்டிக் கால்வயிற்று வெளிகாட்டி
முதுகிற் கலைகாட்டி முன்னழகில் மலைகாட்டி
ஆட்டிப் படைக்க ஆடவரை எண்ணுகின்ற
கூட்டம் பெருகிக் குமுறுகையில் காளையர்கள்
சிருங்காரம் எண்ணிச் சிதறடித்து நெஞ்சுரத்தை
குரங்கேறி ஆடுங் கொம்பாக உலையாமல்
சிரங்கேறி நிற்கும் தேகம்போல் குலையாமல்
அரங்கேற வைக்கும் பண்பிற்கு வைப்பாகி
கட்டோடு நின்று கண்பொத்தி வாழ்ந்திடுவோம்
பட்டாங்கி லுள்ள படி!

மாடிக்கு மாடி எட்டடுக்கிற் கட்டியதைச்
சோடிக்கை செய்து சுகங்குவித்து வீணாந்தக்
கோடிக்குள் நாய்க்குக் கூட்டாளிச் சுகங்கொடுக்கும்
வேடிக்கை ஈகை யினுக்கில்லை! என்றாலும்
வாடிக்கைத் துன்பப் பசிகொண்டு மாள்கின்ற
நாடிக்கு நாடி கைநாடி ஓய்கின்ற
எழ்மை நிலையில் எவரையெனுங் காண்போமேல்
தாழ்மை அன்பாய்த் தந்தவர்க்குப் பிடிசோறு
விட்டாற் போதும்! வேறில்லைப் பேரின்பம்!
பட்டாங்கி லுள்ள படி!

பாடுங் குயிலும் பறைகின்ற பைங்கிளியும்
மாடம் உலவும் மங்கையரும் பலவண்ணப்
புள்ளி மயிலும் பொறிவண்டும் முல்லையினை
அள்ளி யிறைத்த அருர்புள்ளி மான்குலமும்
தென்றல் மலரும் தெண்ணிலவும் பைஞ்சுனையும்
குன்றும் குதிக்கும் அருவிகளும் பூந்துறையும்
புன்னைப் பொழிலும் புதியமணல் மேடுகளும்
தென்னங் கீற்றுஞ் சிலுசலுப்பும் யட்டுந்தான்
கொண்டு படைத்த குறையில்லா உலகொன்றில்
உண்டு மகிழும் உயர்ந்ததிந்த வாழ்வென்று
மூடத் தனமாய் நம்பிடுவோர் முழுதாகக்
கேடைத் தழுவிக் கீழ்மையிலே நொந்திடுவர்!

சீறிவரும் நாகஞ் சிதறடிக்கும் மதயானை
நாறுகின்ற குட்டை நஞ்சூட்டும் நரிக்கும்பல்
கொடும்புலிகள் கோரப் பேய்பூதம் எனுமஞ்சப்
படுங்குலங்கள் இங்கே பலவிருத்தல் கண்டவரும்
நொட்டாத கூர்ந்த நோக்குடையர் வாழ்ந்திடுவர்
பட்டாங்கி லுள்ள படி!



# சிரிப்புக் கவிஞன்

பகிடிவிடும் படியென்னைப் பார்த்திங் கழைத்ததுவே
பகிடிக்குள் பகிடி! அடியேற்கும் பகிடிக்கும்
வெகுதூரம்! ஆதலினால் விளம்புகின்ற பாட்டினிலே
பகிடியில்லை என்றாலும், பகிடியைப்போ லேதேனும்
இருந்தால் சுவைத்திடுக இல்லையெனில் மன்னிப்பீர்!

நகைச்சுவைக்கு மன்னன்: நற்பண்பின் காப்பாளன்!
அகச்சுடர்வு மிக்க அருங்கவிஞன்' – என்நண்பன்
ஒருவன் உள்ளான்! ஊரார்கள் யாவருமே
அருமை எனவே அடிவயிறு நோவெடுக்கச்
சிரிக்கச் சிரிக்கச் செப்பிடுவான் நற்கவிதை!
கவலை மறந்து களிப்படையும் ஆவலுடன்
அவனைத் தினமும் சந்திப்பேன்! அன்றொருநாள்!
உலகத் துயர்கள் ஒன்றடிமன் றடியாகக்
குலைவுற் றஞ்சும் படியாக, கூக்குரலும்
சிரிப்பும் பொங்கச் சேர்ந்தவனோ டிருக்கின்றேன்
வீட்டிலங்கு வேறு யாருமில்லை! அப்பொழுதங்
கேட்டுச் சுமையோ டெதிர்க்கூடந் தனில்நின்று
ஒருவர் அழைக்கின்றார்! உள்ளே எமதறைக்கு
வருகென் றழைத்தோம் வருகின்றார்! எங்களிடம்
வந்துள்ள ஆளார் மணம்பேசுந் தரகரென
எந்தவித மாயோ என்நண்பன் அறிந்திட்டான்!

ஓடோடி உட்போய் மீண்டுங் கரங்களிலே
ஏடேதோ ஏந்தி வருகின்றான்! பெரியவரே'
பொய்யா யிரங்கள் புகன்றேனும் ஓர்மணத்தைச்
செய்யும் படியாய்ச் செப்புகின்ற திவ்வுலகம்!
பொய்யா யிரங்கள் புகல்வீரோ எனக்கேட்டான்!
மெய்யே யன்றிப் பொய்ப்பேச்சு நானறியேன்!
என்ற புன்னகை அத்தரகர் இயம்பாமுன்
நன்றே பாரீர் நான்சொல்வேன் ஆயிரம்பொய்
பெண்ணொருத்தி பற்றி! பிசகென்றால் மன்னிப்பீர்
எண்ணுங்கள் என்று சொல்லிப் படிக்கின்றான்!

* * * *

முற்றும் கூந்தல் முடிமயிர் அல்ல!
கற்றைக் குதிரைவால் கட்டுவ தில்லை!
நெற்றியிற் கூந்தல் நெளிப்பது மில்லை!
மார்க்கச் சாலை மலைகள் செய்யாள்.
வார்த்துப் பூசாள் கண்ணில் மையை!
காதள வோட்டாள் கண்ணை மையால்!
சீதள வாயில் தீட்டாள் செம்மை!
இடுப்பும் உருவில் அடிப்பனை அல்ல!
கடிப்பே இல்லை கனிந்த பேச்சு!
பாயிற் கிடக்கும் பாட்டி வருந்தப்
பேயைப் போலப் பேசுவ தில்லை!
தூரம் இருந்து சுற்றங் கருதி
யாரும் வந்தால் அன்பே இன்றி
நேரம் இல்லை நின்றிட என்றுங்
கீரம் இன்றி எரிந்தது மில்லை.

தமக்கை நல்ல சட்டை போடில்
அமைக்கும கொண்டை அழகா மென்றில்
எரிந்தது மில்லை! இகழ்ந்தது மில்லை'
பரிந்தவள் ஏதும் பறைகில் அதனை
அலட்சியம் பண்ணும் இலட்சியம் இல்லை!

பெட்டைகள் யார்க்கும் பேசிடில் திருமணம்
சொட்டைகள் சொல்லாள் மணமகன் தன்னை!
இருக்கினும் இனிய குணங்கள் குறைவாய்
செருக்கினில் குறையாத் தீயளும் அல்லள்!

இன்னுமோர் பெண்ணை ஈன்றிடில் அம்மா
என்னுடைச் சீதனம் குறையுமென் றேங்காள்!
மணநெய் என்னும் பணநெய் பலவும்
மாற்றி மாற்றித் தலையில் வைத்து
மாற்றிக் கொள்ளாள் மயிர்வெள் ளையாய்!
நாடிக் கொன்றாய் ஆடை கட்டாள்!
பூசல் மாவைப் போய்ப்போய்ப் பூசாள்!
மாசில் மஞ்சள் பூசிக் குளிப்பாள்!
எடுப்பாய்ச் சுருளுங் கூந்தலென் றெண்ணி
அடுப்பில் கம்பி அனலாய்க் காய்ச்சி
எடுத்தங் குச்சந் தலையில் இட்டுத்
துடித்து விழுந்து தோகைக் கூந்தலை
எரித்தது மில்லை! எரிந்தது மில்லை!

கண்ணு டித்துணிக் 'கவுணை'ப் போட்டுப்
பெண்ணு டயெனும் பேச்சுங் கேளாள்!
அப்பனை ஆட்டி அணிகள் வாங்கி
ஒப்பனை போட்டே உலகஞ் சுற்றாள்!
புடவைக் கடைக்குங் கடனே இல்லை!
காப்புக் காரன் சீப்புக் காரன்
ஒருவருக் கேனும் தருமதி இல்லை!

புதுமைக் காகப் பூட்டிய நகைகள்
அதிகம் அழித்துச் செய்யவு மில்லை!
பாட்டி கடுக்கன் பவுணைத் தனக்குப்
பூட்டிட எண்ணுள் புதுநகை யாககி!
குதிச்சப் பாத்தைக் கூறிப் புலம்பாள்!
பின்னலைத் தூக்கி முன்னல் போடாள்!

ஆங்கிலம் பேசும் தீங்கினைச் செய்யாள்
டடியென் றன்புத் தந்தையைப் பழியாள்!
நடியாள் மேற்கின நடைமுறை களிலே!
பப்பா வாயும் அப்பா மாறுர்!
மம்மி என்றும் வழங்காள் தாயை!
கும்மி தெரியும்! குதிக்காள் போல்றும்
டட்டா சொல்லிக் கொட்டாள் வணக்கம்!
அப்பன் தலையில் அமருங் குடுமி
எப்போ தொழியும் என்றும் ஏங்காள்!
தோழி மார்க்குஞ் சொந்தத் தாயை
ஏழை வேலைக் காரி என்காள்!
கையிற் கரியைப் பூசப் பயந்து
செய்யச் சமையல் சிணுங்கிய தில்லை!
அம்மா முயலச் சும்மா திரியாள்!
தேங்காய் அம்மியில் தின்னுள்! அதனல்
தீங்காய் மணநாள் மழைசிந் தாது!
மாங்காய்ச் சம்பல் மறைவாய்த் தின்று
வாங்கிக் கட்டாள் வயிற்றுள் வலியை!

மாதா வயிறு பசித்து வருந்தத்
தோதா யில்லைச் சோறென் றழுது
கொட்டுவ தில்லை! திட்டுவ தில்லை!

அழகிற் குறைந்த ஆரையுங் கண்டால்
பழகற கஞ்சிப் பதுங்கிய தில்லை!
செய்தித் தாளைக் கையில தூக்கி
திருமணப் படங்கள் தேடிப் பிடித்து
மணமகன் தன்னை மணமகள் தன்னை
பெருநகைப் போடு பேசாள் கேலி''!

• • • •

தரகர் கூடத் தந்தொழிலை யேமறந்தார்
இருமல் தோன்ற இடுப்பு வலியெடுக்க
விழுந்து சிரித்தார் எழுந்து பறந்திட்டார்.

உலகுவக்கப் பாடிடுமிவ் வொப்பில் கவிபற்றிப்
பலகதைகள் உண்டு! பகரப் பொழுதில்லை!
ஒன்றிரண்டு சொல்லி ஓய்ந்திடுவேன! இன்னொருநாள்
சென்றிருந்தேன் இந்தச் சிரிப்பாளன் மனைஅன்னான்
தம்பி ஒருவன் சமுத்திரங்கள் ஐந்திலுமே
அம்பி செலுத்தி அள்ளிவரும் மீனெல்லாம்
கொட்டி அவித்துக் கொடுத்தாலும் ஆசைதான்!
கட்டாப் பாரை! கயல்!சூடை! முரலென்றும்
ஒட்டி!ஓரா! கெளிறு!பூஞ் சைக் கண்ணி!
திருக்கை! கொய்மீன்! சீலா! சுரு! என்றும்
இருக்கும் மீன்கள் இனமெல்லாஞ் சொல்லிடுவான்!

மீன்தின்ன வந்த மிகக்கொடிய மீனிவனை
ஏனிங்கு மண்ணில் இறைவன் படைத்தானோ?
தண்ணீரே யன்றோ சரியிவனுக் கெனச்சொல்லி
எண்ணிப் பலவழியில் இவனைத் திருத்திடவே
அம்மா அப்பா அண்ணன் அனைவருமே
தம்மா லியன்ற வரைமுயன்று சலித்திட்டார்.
நான்கடைசி யாக நல்லதொரு வழிகண்டேன்

மனபறற்ச சற்று விளையாட்டாய் ஒருகவிதை
பாடி அவனுக்குப் படித்ததனைக காண்பித்தேன்!
அன்றேமீன் ஆசை அற்றுவிட மாமிசத்தை
இன்று வரைக்கும் எண்ணுவதும் இல்லையென்!
கண்டால் வெறுத்துக் கக்கல்கள் துப்பலினை
உண்டுயிர்க்கும் ஊத்தை மீனே!சைக்! எனறிடுவன்
என்று சிரித்தான்! எங்கே அப் பாட்டென்றேன்!
நன்ருபார் என்று நகைப்போடு தந்திட்டான்
கதையை மெல்லப் படித்துமக்குங் காட்டுகறேன்
இதையும் மாந்தி இருந்து மகிழ்ந்திடுவீர்

• • • •

கடைகெட்ட ஓர்வலை ஞன்! காசின்மேற் பித்துடையான்!
கடல்மேலே போவதற்குங் கட்டுமரங் கட்டுதற்கும்
வலைதூண்டில் வாங்குதற்கும் வைத்திருக்கும் பணந்தன்னை
செலவாக்க விரும்பாதான்! சேர்க்கின்ருன் பணம்மட்டும்!
எப்படிஎன் ருல்தனியே இரவினிலே கிளம்புகிருன்!
துப்பலுடன் கக்கலுடன் சுத்தமற்ற பட்டணத்துச்
சாக்கடையின் அழுகல்நீர் போய்ககலக்கும் ஓர்குளத்தை
வந்தடைவான்! கையொன்று வைத்திருக்குந் தீப்பந்தம்!
பந்தித்து வைத்திருப்பான் பறியொன் றிடுப்பினிலே!
பந்தமெனும் விளக்கருகில் பளபளக்குந் தண்ணீரில்
வந்ததுமே மணலில்போய் மறைகின்ற மீன்களினைப்
பிடிக்கின்ருன்! பிடிக்கின்ற மீன்களது பிடரியினைக்
கடிக்கின்ருன்! பறிக்குள்ளே கைவிட் டெறிகின்ருன்!

பாதியிராப் போதினிலே பறிநிறைந்து விட்டதுமே
வீதியிலே ஏறுகிருன்! விடியுதற்கு முன்நடந்து
தொலைவிலுள ஓருரைச் செலவின்றி வந்தடைந்தான்!
தக்கவை உயிரளவில் சாராத அறிவிலிகள்
மக்களினப் பெயர்களினை மட்டுந்தான் உடையவராம்
ஊர்மக்கள் கரையானை ஓடிவந்து சூழுகிருர்!

பார்பிள்ளை! கடல்நடுவில் படகோட்டிப் பற்றியமீன்
என்றடித்துப் புளுகி அவை ஏமாற்றி விற்றிடுவான்!
பட்டணத்தி லூததையினைப் பலர்துப்புங் கக்கலினை
கெட்டழுகும் தீனிபுழுக் கெந்தலினைத் தின்றுவளர்
நாற்றமெழும் மீன்களினை நல்லகடல் மீனென்று
போற்றிப் பலஆண்டாய்ப் பொய்சொல்லி வாழுகிறான்!

இக்கரையான் நேர்மையிலே எள்ளளவே என்றாலும்
அக்கறையே இல்லாதான்! அன்றிரவுங் குளந்தன்னில்
பிடிக்கின்றான் மீன்களினை! வழக்கம்போல் பிடித்தொன்றைக்
கடிக்கிறான்! ஐயையோ கடிக்கையிலே மீன்தப்பி
வழுக்கிக்கொண் டவனுடைய வயிற்றுக்குள் போகிறது!
வழுக்கிக்கொண் டோடியமீன் வயிற்றைக் குடைகிறது!
துடிக்கின்றான் தண்ணீரில்! துள்ளுகிறான்! பதைக்கின்றான்!
கடக்கின்றான் குளந்தன்னை! கரையேறித் தெருவினிலே

ஓடுகிறான் அடிவயிற்றை ஒருகையாற் பிடித்தவனாய்!
ஓடுகின்ற ஒலிகேட்ட ஊர்காவல் துறையொருவன்
யாரங்கே என்றோடி ஆளைப்போய்ப் பிடிக்கின்றான்!
தூரம் பலஓடித் துன்பமுறுங் கரையானோ
வருத்தமுடன் 'ஐயையோ வயிற்றுக்குள் மீ'னென்று
துள்ளுகிறான்! காவலனோ சோக்கான விசரனென்று
தள்ளுகிறான் ஓடென்று! தவிப்போடே ஓடுகிறான்!

ஓடுகிறான்! ஓடுகிறான்! ஓயாமல் ஓடுகிறான்!
ஓடஅன்றி ஒன்றுஞ்செய்யத் தெரியாமல் ஓடுகிறான்!

சித்தமெலாம் கெட்டவனாய்ப் புத்தியெலாம் விட்டவனாய்
ஓடுகிறான்! ஓடுகிறான்! ஓயாமல் ஓடுகிறான்!

வழியினிலே இன்னொருவன் வந்தவனைப் பிடிக்கின்றான்!
அழுகையுடன் அவனுக்கும் சொல்லுகிறான் சங்கதியை!

அரைவிசரன் அவனெனிலோ அப்படியா வாஎன்ருன்!
ஒருமிளகாய் வெங்காயம் உப்புடனே தேங்காய்ப்பூ
தீக்குச்சி இவையோடு சிறுதுண்டு மாங்காயும்
மூக்காலும் வாயாலும் முயன்றவற்குத் தீற்றுகிருன்
மீனங்கு செத்துநல்ல விதமாகக் கறியாகித்
தானுய்ச் சமித்தெல்லாம் சரியாகும் என்கின்ருன்.

கரையானின் வேதனையோ கணந்தோறும் வளர்ந்திடவே
இரையானேன் பணந்தேடும் இழிவான இச்சைக்கு!
குலவித்தை என்றிந்தக் கொலைகள்மேற் கொண்டிங்கு
புலைமை யெனும்பொய்மை புகுத்திற் பிழையன்ரே?

தீங்கிற்குப் புத்தியினைத் திறமாகக் கைக்கொண்டே
ஈங்கென்றன் உயிர்காக்க இயலாத தாக்கிட்டேன்!
என்றேன் றழுதிட்டான்! எவ்வழியும் தோன்றவிலை!
நின்றங் கழுகையிலே நெடுமரம்போல் வீழ்ந்திட்டான்!
இறந்தான் வீண் ஆசையினுல் மறைந்தான் அனுதையென!

* * * *

படித்து முடித்துச் சிரித்தேன் இதுபோல
எடுத்துக் காட்ட அவன்கவிதை ஏராளம்.

* * * *

பொதுமக்கள் கோயிலொன்றில் பொய்யனெருவெறிமாடன்
அதிகாரம் நடத்தப்போய் அடிஉதைகள் படுகின்ருன்!
கொதிக்கின்ற நெஞ்சினிலே கொப்பளிக்குஞ் சீற்றத்தால்
மதிக்கென்று வேலையெதும் வைக்காமல் மையிருளில்
கோயிலது கூரையினைக் கொளுத்தப்போய்த் தலைமீதும்
பாயெரியுண் மண்ணெய்யைப் பதட்டத்தில் கொட்டுகிருன்.

தீயுயர்த்திப் பிடிக்கையிலே தெரியாமல் தன்தலையைப்
பேயனைப்போல் மூட்டுகிறான்! பிடித்தெரியும் தீயணைக்கக்
குளத்திற்போய்க் குதிக்கின்றான்! கொஞ்சம் பொறுத்திருளில்
மழித்ததென வழுக்கையென மயிரெரிந்த மொட்டையொடு
மறைவாக வீடடைய மனையாள்கண் டஞ்சுகிறாள்!
திறவாது மனைபூட்டித் திருடனென்று கத்துகிறாள்!
அயலவரோ ஓடிவந்தங் காத்தவனைக் கட்டுகிறார்!
பயந்தெதுவுஞ் சொல்லாமற் பதறியவன் நிற்கின்றான்!
பிள்ளையொடு பெண்டாட்டி அடிபணியும் ஏவலர்கள்,
உள்ளபடி ஆள்யாரென் றுணராமல் உதைக்கின்றார்!

பெண்டாட்டி பின்பறிந்து பேய்மனிதா! கோயிலொடா
சண்டித் தனங்காட்டித் தலைகட்டாய்! தலைகெட்டாய்!
என்றழுது சிரிக்கின்றாள் எங்கெங்கும் பறக்கின்ற
தன்றிரவே இச்செய்தி! அவமானம் கணக்கில்லை!

• • • •

இத்தகைய பாக்கள் இன்னும் பலஉண்டு
மெத்தச் சுவைத்தல் வேண்டாம் நிறுத்துகிறேன்!



# சேக்கிழான் காப்பியம்!

பைந்த மிழ்ச்சுவை சொட்டிடச் சொட்டிட
　　பத்தி யின்சுவை சொட்டிடச் சொட்டிட
சிந்தை அள்ளும் இலக்கியத் தேன்சுவை
　　சேர்ந்து நின்றுடன் சொட்டிடச் சொட்டிட
தந்த னன்திருத் தொண்டர் புராணமாம்
　　சைவ நற்றமிழ் நூலினைச் சேக்கிழான்!
அந்த மென்றமிழ்ச் சிவநெறித் தொண்டனின்
　　அரிய தொண்டினை அவனி யறிந்திட

எடுத்தி ரும்விழ விற்சிறி யேற்றிடும்
　　ஈந்த மைக்குமென் நன்றிகள் மெய்மைநூல்
படித்த சர்மலி யாழ்நகர் சைவமே
　　பண்டு தொட்டுறை ஓர்நகர், வந்தபல்
இடுக்க ணுக்கழி யாதுசை வந்தமிழ்
　　இலங்க நாவலன் வந்தஇந் நன்னகர்
மிடுக்கு டன்ஒரு சிவநெறிப் பாவலன்
　　விழவெ டுத்திடல் சாலப் பொருத்தமே!

சேக்கி ழான்திருப் பாக்களில் பக்தியாம்
　　தெய்வி கச்சுவை சொட்டுவ தேனெனப்
பார்க்க லாம்இனி! மானுடன் இன்னுயிர்ப்
　　பக்கு வம்பெறின் அத்துடன் ஆண்டவன்
நோக்க மும்பெறின் அன்னவன் வாழ்வினில்
　　நொந்து செய்யவும் வேண்டுவ துள்ளதோ?
கேட்க வேண்டுமோ இந்த நிலைப்படும்
　　சேக்கி -ழான்சவிக் கெம்பிடும் பத்தியை.

பாடு கின்ற பொருளின் மணத்திணைப்
பாடிடுங் கவி காட்டிடும் தொண்டராம்
பாடு கின்றவர் ஈசன் இணையடி
பற்றி வீழ்ந்து புரண்டு மகிழ்பவர்
ஆடு கின்றவர் அவ்விறை வன்உடன்
அன்பி னைந்திணை இல்லற வாணராய்
ஊடு கின்றவர் பற்றிய பாட்டினில்
ஓடும் அன்புவெள் ளஞ்சொலல் கூடுமோ?

காசு காசென்று காலமெல் லாம்அலை
காசி னிக்குளே காசென்ன? மாசென்ன!
தூசு தூசெனச் சொல்லி விலக்கியும்
தொட்டு மில்லறம் உட்துற வெய்தியும்
ஈசன் இன்னடி எண்ணிடும் மெய்யுணர்
வெய்து தொண்டரின் மெய்ப்புகழ் வாழ்வினை
பேசு காவியப் பத்திச்சு வைதனைப்
பேச வேண்டுமோ பேசிட லாகுமோ?

பூக்க ளும்அல, பொன்பொரு ளும்அல,
பூமி மானிட உன்னிடம் கேட்டிடல்!
யார்க்கு முள்ளது! யான்கொளற் குள்ளது!
யாதெ னில்உள துள்ளம்! அதைக்கொடு!
சாக்கி யன்கதை பார்த்திடு வாய்எனும்
தண்ணி றைவனின் தத்துவம் சாற்றிடும்
சேக்கி ழான்கவி பத்தியின் இன்சுவை
செப்பி டல்வியப் பிற்குரித் தாகுமோ?

தொண்ட ருக்குத்தன் சொந்த மனைவியை
துயர மின்றிக் கொடுத்தும் மகிழ்விறை
கொண்டி டச்செயல் நாடிடு வோரெனில்
கொன்று தான்பெற்ற பிள்ளைச மைத்துமே
உண்டி டுமெனத் தந்திறை இன்புறல்
ஊக்கு வோரெனில் ஆண்டவன் பாலவர்
கொண்ட அன்பினைக் கூறிடல் ஆகுமோ?
கூறி யோர்புகழ் கூறிடல் கூடுமோ?

கோயி லைமறை யோர்கள் மடங்களை
கோபு ரம்நெடு வீதிகள் தொண்டரின்
வாயி னிற்பயில் வேண்டுதல் ஆடலை
மலர்வ னங்குளம் மணியை அகிற்புகைத்
தூய நல்மணத் தூபதீ பங்களை
சொல்லி ஆக்கியே பத்தியின் சூழலை
நாயன் மார்வர லாறுகள் சொல்லினர்
நம்ம னங்களில் மெய்யன் புணர்த்தினர்!

தாயொ ருத்தியின் பக்கலி ருந்தவள்
தந்த சோற்றையே அன்னவள் வாயிலோர்
சேய ருத்தி இருகைகயில் சட்டென
சிறிய அக்குழந் தையறி யாமலே
தாயெ டுத்தந்தச் சோற்றை மறைத்தனள்
தவித்த தந்தக் குழந்தை புலம்பியே
தீய யடுப்பினில் கால்வைத்துச் சாகவும்
சின்னப் பிள்ளை துணிந்துடன் சென்றது!

பிள்ளை அன்பினை தாழும் வியந்திடும்
பேரருண்மிகும அன்னை எழுந்தனள்
அள்ளி நெஞ்சொடு கட்டிய ணைத்தனள
அன்பு முத்தங்கள் மாரி பொழிந்தனள்
உள்ளம் நெக்கி உருகும் அருள்மனம்
உடையன் இத்திரு அன்னை இறைவனும்
பிள்ளைகள் இந்தத் தொண்டர்! இவர்களின்
பெருகு பத்திகொள் பாட்டுக்கள் பார்மினோ!

அன்னை நாட்டவர் அன்னை இனத்தவர்
அத்தனைதிருத் தொண்டரும்! மென்தமிழ்
அன்னை நாட்டன தொண்டர்க ளன்றெலாம்
அடைந்த டைந்து வணங்கிய கோயில்கள்!
தன்னி னத்தவர் பத்தியை, கோயிலை
சாற்ற வந்திடும் பேரின்ப வேகமும்
தென்னை ன்திருச் சேக்கிழான் பத்தியில்
செழித்த பாடல்கள் பாடிட வைத்தன.

ஒப்பி லாஒரு பேரின்பி லக்கியம்
உண்மை யில்திருத் தொண்டர் புராணமே!
இப்ப டிச்சிறப் புள்ளதோர் நூலினை
எங்க ளுக்குளே கற்பவர் கொஞ்சமே
செப்ப மெய்திய நல்லுயிர் கொண்டவர்
சிற்சி லர்மட்டு முள்ளதே காரணம்!
குப்பை நூல்இழி பண்புடைப் பாட்டுகள்
கொண்டு கற்பவர் நம்முள் மலிந்தனர்.

---

# கவிதை ஒலித்த அரங்குகள்!

## இன்பத்தில் இன்பம்!

கவிஞர் திரு. செ. து. தெட்சிணாமூர்த்தி கந்தர்மடம் கந்தப்புராண மடத்தில் அன்னையார் நினைவாக நிகழ்த்திய தமிழ்விழாக் கவியரங்கில் நீதியரசர் செ. தனபாலசிங்கம் அவர்களின் தலைமையில் அரங்கேறிய கவிதை.

## இதுதான் வாழ்வு!

நல்லூர், கொழும்புத்துறை, பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகள் இணைந்து கொழும்புத்துறை ஆ. க. வில் நடாத்திய தமிழ்விழாவின் கவியரங்கில் நவாலியூர் திரு. சோ. நடராசன் B. A. அவர்கள் தலைமையில் பாடி அரங்கேற்றியது,

## கணேசையா

கட்டுவன பாலர் ஞானோதய வித்தியாசாலையில் பண்டிதர் வ. நடராசன் அவர்கள் தலைமையில் ஏற்பாடாகிய மகாவித்துவான் கணேசையா நினைவுவிழாவில் கவிஞர் சில்லையூர் செல்வராசன் தலைமையில் பாடி அரங்கேற்றப்பட்டது.

## குயிலே கூவு!

கவிஞர் விடிவெள்ளி நினைவுவிழா நல்லூர் சாதனபாடசாலை மண்டபத்தில் நடந்தபொழுது கவிஞர் சொக்கன் தலைமையில் அரங்கேறிய கவிதை.

## குறட்டைக் கலைஞன்!

இலங்கைக் கம்பன் கழகம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடாத்திய கம்பன் விழாக் கவியரங்கில் கவிஞர் நாவற்குழியூர் நடராசன் தலைமையில் பாடிய கவிதை.

## தங்கத் தாத்தா!

மானிப்பாய் பட்டினசபை அரங்கில் நடைபெற்ற சாகித்திய விழாவில் பண்டிதர் க. சச்சிதானந்தன B. A. தலைமையில் அரங்கேறிய கவிதை.

## வான்புகழ் வள்ளுவன்!

ஏழாலை மேற்கு சமூகசேவா சங்கத்தினர் சைவவித்தியாசாலையில் நடாத்திய வள்ளுவன் விழாவில் கவிஞர் இ. நாகராசன் தலைமையில் அரங்கேறிய கவிதை.

## வாழ வழி வகுப்போம்!

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நல்லூர் மு. போ. வாலிபர் சங்கம் நடாத்திய ப. ஜீவானந்தம் நினைவு விழாக் கவியரங்கில் கவிஞர் க. சொக்கன் தலைமையில் பாடப்பெற்றது.

## பாலையும் புதுச் சோலைகளாகிட!

சுழிபுரம் அம்மன் கோயில் முன்றிலில் நடைபெற்ற சாகித்திய விழாவில் முனைவர் ஆ. சதாசிவம் M. A. தலைமையிலும், கந்தரோடை முற்போக்குவாலிபர் சங்கத்தினரால் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற பாரதிவிழாவில் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் தலைமையிலும் அரங்கேற்றப்பெற்றது.

## சிறுமை கண்டு பொங்குவோம்!

யாழ் — இளம் எழுத்தாளர் சங்கத்தினர் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடாத்திய ஆண்டுவிழாவில் கவிஞர் அம்பி தலைமையில் அரங்கேறியது.

## யாழ்நூல் முனிவன்!

இலங்கை அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் யாழ்ப்பாணம் சாங்கையர்மடம் பிள்ளையார்கோயில் மண்டபத்தில் நடாத்திய நாவலர்விழாவில் கொக்குவில் குமாரசாமிப்புலவர் தலைமையில் அரங்கேறியது.

## போனாற் போகட்டும்!

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடிச் சனசமூகநிலைய ஆண்டுவிழாக் கவியரங்கிற்குத் தலைமைவகித்துப் பாடிய கவிதையின் ஒரு பகுதி.

## வேடிக்கைக் கனவு!

திருநெல்வேலி செங்குந்த இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பாரதிவிழாவில் கவிஞர் விடிவெள்ளி தலைமையில் பாடப்பட்டது.

## புத்தாண்டு வரக் கூவு!

இலங்கை வானொலி தேசீய ஒலிபரப்பில், தமிழ்நிகழ்ச்சி அதிகாரி கவிஞர், நாவற்குழியூர் நடராசன் தலைமையில் பாடி ஒலிபரப்பாகியது.

## உண்டோ இணை?

ஏழாலை மேற்கு சமூகசேவைச் சங்கம் ஏழாலை சைவ வித்தியாசாலையில் நடாத்திய வள்ளுவாவிழாக் கவியரங்கில் வித்துவான் சி. ஆறுமுகம் தலைமையில் பாடியது.

## பட்டாங்கி லுள்ளபடி

கிழக்கிலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் மட்டக் களப்பு நகரசபை மண்டபத்தில் 3 நாட்கள் நடாத்திய முத் தமிழ்விழாவில் இடம்பெற்ற வளர்ந்தோர்க்கான கவியரங்கில் வித்துவான் F. X. C. நடராசா தலைமையில் அரங்கேறியது.

## சிரிப்புக் கவிஞன்!

திருநெல்வேலி கிழக்கு வைரவர்கோயில சனசமூகநிலை யத்தினர் நடாத்திய ஆண்டுவிழாவில் கவிஞா அம்பி தலை மையில அரங்கேறிய கவிதை.

## சேக்கிழான் காப்பியம்!

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் யாழ். இந்துக் கல்லூரியில் நிகழ்த்திய சேக்கிழார்விழாவில் மாலை நிகழ்ச்சியின் போது பண்டித வித்துவான் சைவப்புலவர் க. வேந்தனர் தலைமையில் அரங்கேறிய கவிதை.



# இவரைப்பற்றி ...!

கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் நாடறிந்த நற்கவிஞர். இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு ரூபா 1000/= "எழிலி" காவிய மூலம் பெற்றவர். இப் பரிசு பெற்ற தமிழ் எழுத்தாளர்களுள் வயதில் மிக இளைஞர்.



யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்; இப்பொழுது ஆசிரியராகிப் பயிற்சி பெறுகிறார்.

'கவிதை' என்றதும் பஞ்சாட்சரம் என்னும் எழுத்தினை எண்ணும் நிலை, வளர்ந்து வருகிறது.

கவிதைப் போட்டிகளிற் பரிசுகள் பாராட்டுக்கள் பல பெற்றவர். 'கவியரங்கேறி' வரும் இன்றைய முன்னணிக் கவிஞர்களுள் ஒருவர், என்பதை "தண்டலையில்" இடம் பெற்றிருக்கும் பல் வகைக் கவிதைகளும் காட்டும். தமிழ் வளம் தந்த இக் கவிஞரின் குழந்தைக் கவிதை நூலொன்று இந்தியாவில் வெளிவர விருக்கிறது.

'கவிஞர்கள் பிறக்கிறார்கள்' என்னும் மகாவாக்கியத்திற்கு இலக்கணமாக அமைந்தவர் நம் கவிஞர்.

"பண்பார் தமிழ் பரப்பும் பாவலன் பஞ்சாட்சரமாம்
நண்பாரும் நானிலத்தோர் நற்கவிஞன் வாழியவே"

கவியர்: வித்துவான்

க. கணபதிப்பிள்ளை B. A.